பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

மங்களவைபவங்களுக் கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட் உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2.50

★ காஞ்சிபுரம் ★ பெனாரிஸ் ★ கெவி தஞ்சூர் ★ பாட்லி ★ பட்டுவேஷ்டிகள் மற்றும் சகலவிதமான

பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட் உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 44 விபவ ஆண்டு மார்கழி மீ 29 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 04 (13-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர் 44

இலங்கை வங்கி மூலம்

# வடக்கு, கிழக்கில் இலகு கடன் திட்டம்

## உடன் விஸ்தரிக்குமாறு ஜனாதிபதி பிரேமா பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜனவரி 13

கிராமங்களிலும், நகரங்களிலும் இலகு முறையில் கடன் வழங்குவதற்கான இலங்கை வங்கியின் திட்டத்தை உடனடியாக வடக்கு கிழக்கில் விஸ்தரிக்குமாறு நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாச உத்தரவிட்டுள்ளார்.

கடன் வழங்கும் பிரதிநிதி... (Credit Facilitat...) மூலம் கிராம, ...மக்களுக்கு இலகு ...ங்கும் திட்டம் ...இலங்கையின் பல பகுதிகளிலும் நடைமுறையில் உள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஊர்காவற்றுறையில் இத்திட்டம் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த முறையை வடக்கு, கிழக்கின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்குமாறு ஜனாதிபதி இலங்கை வங்கியின் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை அடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இலங்கை வங்கியின்

(8-ஆம் பக்கம் பார்க்க)

உள் நாட்டுச் சிவில்

## விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமானது

கொழும்பு, ஜன 13

உள் நாட்டுச் சிவில் விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமட்டும்இரண்டு விமானங்கள் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து சேவையாற்றின.

விமான நிலையத்தில் இடம் பெறும் வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தவிர வேறுஎதுவும்மேற்கொள்ளப்படமாட்டாது.

இரத்மலானை விமான நிலையக் கட்டடத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை விமான நிலைய அதிகாரி தேடி சில்வா வெளியிட்டார்.

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்தே உள் நாட்டு விமானச் சேவை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

கொழும்புத்துறையில் நேற்று

## நவ சமசமாஜக் கட்சி பிரமுகர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜன 13

நவசமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு ஏ வே அண்ணாமலை (வயது 55) நேற்று மாலை 5 45 மணியளவில் கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்

இவர் நவசமசமாஜக் கட்சியின் அரசியல் குழு (பொலிற் பீரோ) உறுப்பினராவார்.

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் ஐக்கிய சோஷலிச முன்னணியின் தேசிய வேட்பாளர் பட்டியலில் திரு அண்ணாமலையின் பெயரும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

நட்புறவு உடன்படிக்கை:

## இந்தியாவுடனனபேச்சு திருப்தியாக உள்ளது

### அமைச்சர் காமினி சொல்கிறார்

கொழும்பு, ஜன 13

அமைதி ஒப்பந்தத்திற்கு பதில் நட்புறவு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவது சம்பந்தமாக இந்தியாவுடன் தற்போது நடந்துவரும் பேச்சுக்கள் மிகவும் திருப்திகரமாக உள்ளன.

அமைச்சர் காமினி திஸநாயக்கா கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு வெளியிட்டார்.

அமைச்சர் திஸநாயக்கா அங்கு மேலும் சொன்னதாவது:-

ஜனாதிபதியின் வேண்டுகோளின்மீது அமைதிப் படையின் இரண்டு பிரிவுகள் வாபஸாகியுள்ளன.

நட்புறவு உடன்படிக்கை ஒன்றை இந்தியாவுடன் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்திற்குப் பதில் இந்த உடன்படிக்கை வரவேண்டும் என ஜனாதிபதி விரும்புகிறார், இது சம்பந்தமாக இப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

இப்படி திரு திஸநாயக்கா சொன்னார். (ஒ-எ)

## ஆசிரியர்களுக்கான சேவைகாலமுன்பயிற்சி 20இல் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜன 13

கலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்குமான சேவைகால முன் பயிற்சி எதிர் வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

கலைப்பட்டதாரி ஆசிரியர்களாகவும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களாகவும் 402 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான சேவை முன் பயிற்சி மூன்று நிலையங்களில் நடத்தப்படஉள்ளது.

கணித, விஞ்ஞான ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் தமது நியமனக் கடிதங்களை எதிர் வரும் 17 ஆம் திகதியும்- கலைப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் தமது நியமனக் கடிதங்களை எதிர் வரும் 19 ஆம் திகதியும் யாழ் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

## விமானத் தாக்குதல

பேருட், ஜன 13

தென் லெபனானில் உள்ள பலஸ்தீன அகதிகள் முகாம்கள் மீது 24 மணித்தியாலங்களில் இரண்டாவது தடவையாக விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-எ)

## முன்னாள் எம். பி எம்- ஸி- காலமானார்

யாழ்ப்பாணம் ஜன 13

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு எம் ஸி சுப்பிரமணியம் நீண்ட நாள் சுகயீனத்தின் பின்னர் நேற்றுப் பிற்பகல் காலமானார்.

திரு சுப்பிரமணியம் முன்னாள் மூதவை உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார் இவர் இலங்கைக் கம்யூனிஸ்ட்

(8-ஆம பக்கம் பார்க்க)

### சுபநேரம

13-1-1989
வெள்ளிக்கிழமை
மார்கழி 29

சுபநேரம்:
6.33 முதல் 8.03 வரை
ராகுகாலம்:
11.03 முதல் 12 33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆர்மேனிய பூமியதிர்ச்சி:

## 36 நாட்களின் பின் நிலவறையிலிருந்து 6 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்

மாஸ்கோ, ஜன 13

ஆர்மேனியாவில் பூமிபதிர்ச்சி ஏற்பட்டு 36 தினங்களின் பின்னர் இடிந்து விழுந்த ஏழு மாடிக்கட்டிடத்தின் நிலவறைக்குள் சிக்கிய ஆறுபேர் நேற்று மீட்கப்பட்டனர்.

இவர்கள் சிக்கியிருந்த பகுதிக்குள் ஏராளமான தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு இருந்தது.

அவற்றை உண்டுகொண்டு இவர்கள் 36 தினங்களைக் கழித்தனர். இவர்களில் ஒருவர் வைத்தியப் பயிற்சி பெற்றவர்.

அவர் ஏனையோர்களுக்கு தசைநார்களுக்கானபயிற்சியை அடிக்கடிகொடுத்துவந்தார்.

ஆர்மேனிய பூமியதிர்ச்சியில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட லெனின்னகாம் நகரில்இந்தஅதிசயம் இடம்பெற்றது. (ஒ-எ)

ஐ. நா. பாதுகாப்புச் சபையில்

## பிரேரணை சமர்ப்பிக்க பி. எல். ஓ. வுக்கு அதிகாரம்

வாஷிங்டன், ஜன. 12

ஐ நா பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்கும் அதிகாரத்தை பலஸ்தீன விடுதலை இயக்கம் (பி. எல். ஓ.) பெற்றுள்ளது.

ஐ நா பாதுகாப்புச் சபை இந்த உரிமையை வழங்கியது.

இதுகால வரை இன்

(8-ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பி. எல். ஓவின் பாடு வர வர கொண்டாட்டந்தான் என்டு சொல்லுங்கோ பின்னை.......!

## கொழும்பில் குண்டு வெடிப்பு

கொழும்பு புறக்கோட்டையில் மான்னிங் மார்க்கட்டில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இரண்டு குண்டுகள் வெடித்தன.

மரக்கறி விற்பனையில் ஈடுபட்டிருந்த இருவர் அப்போது காயமடைந்தனர். (ஒ-எ)

## 3 மாணவிகளும் விடுவிப்பு

மன்னார் ஜன 13

இலுப்பைக் கடவை இந்திய அமைதிப்படையினரால் கடந்த நவம்பர் மாதத்தில் கைது செய்யப்பட்ட மாணவிகள் மூவர் விடுவிக்கப்பட்டனர்.

பெரியமடுப் பகுதியில் கைதான இவர்கள் மூவரும் பெரியமடு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவிகள் ஆவர். (ஒ ரி)

## ஆசிரியருக்கு இம்மாதம் முதல் சம்பள உயர்வு

கொழும்பு, ஜன 13

கடந்த மாதம் நவம்பர் முதல் வழங்கப்படவிருந்த ஆசிரியருக்கான சம்பள உயர்வு, இம்மாதம் முதல் வழங்கப்படும்.

கல்வி அமைச்சு, நாட்டின் சகல பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் இது சம்பந்தமான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. (ஒ-எ)

அவசரகாலச் சட்ட எதிரொலி:

## ஜே.வி.பி.தீவிரவாதிகள் 270 பேர் நேற்று விடுவிப்பு

கொழும்பு, ஜன 13

அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜே.வி.பி தீவிரவாதிகள் 270 பேர் நேற்றுத் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் அரசவிரோத சுவரொட்டிகளை ஒட்டியதுபோன்ற குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டிருந்தவர்கள் ஆவர்.

வெடி மருந்து, மற்றும் ஆயுதங்களை வைத்திருந்தமைக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் காவலில் வைக்கப்பட்டிருப்பர்.

சுமார் 80 தடுப்புக் காவல் கைதிகள் சாதாரண கைதிகளாகக் கருதப்படுவர். அவர்களைப் பிணையில் விடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது: சட்ட ஆலோசனை பெறவும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய கைதிகள் தொகுதி தொகுதியாக விடுவிக்கப்படுவர். (ஒ-எ)

## ஹங்கமப் பகுதியில் 3 சிப்பாய்கள் சுட்டுக்கொலை

### மற்றும் நால்வருக்குக் காயம்

கொழும்பு, ஜன 13

தென் மாகாணத்தில் ஹங்கம என்னுமிடத்தில் இலங்கை இராணுவத்தைச்சேர்ந்தமூன்றுசிப்பாய்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

மற்றும் 4 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

புதன்கிழமை நள்ளிரவு அவசர கால நிலை நீக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் இத் தாக்குதலைத் தென் இலங்கைத் தீவிரவாதிகள் நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

பொங்கல் தினம் முதல்

## மீன் பிடிப்பதற்கான நேரக் கட்டுப்பாடு நீக்கம்

மீன் பிடிப்பதற்கு இருந்துவரும் நேரக் கட்டுப்பாடுகள் நாளை சனிக்கிழமை முதல் முற்றாக நீக்கப்படுகின்றன.

பொங்கலை முன்னிட்டு பலாலியிலுள்ள இந்திய அமைதிப்படையின் தலைமையலுவலகம் இதனை அறிவித்துள்ளது

கடலில் எல்லா நேரங்களிலும் 10கிலோமீற்றர் தொலைவு வரை சென்று மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது

கடலில் 10 கிலோமீற்றர் வரை எந்த நேரமும் மீன்பிடிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஒ)

### தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன 13

பருத்தித்துறை. புலோலி மேற்கு பகுதிகளை நேற்று அமைதிப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். (ச-160)

## இந்திய விமானப்படை 'ஹெலி' விபத்துக்குள்ளானது

### விமானியும், மற்றொருவரும் பலி!

சென்னை, தாம்பரம் அருகில் இந்திய விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் விமானி. மற்றவர் விமானப் பயிற்சி வழங்கும் வல்லுநர் ஆவார்.

விபத்துக்கான காரணம் சொல்லப்படவில்லை. பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயமே விபத்து ஏற்பட்டது.

## மன்னாரில் நிவாரணம்

மன்னார், ஜன. 13

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பரப்பாங்கண்டல் கிராமசேவகர் பகுதிக்கான ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணக் கொடுப்பனவுகள் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை வழங்கப்படும்

230 குடும்பங்களுக்கு நாலாயிரம் ரூபா முதல் ஆறாயிரம் ரூபா வரை வழங்கப்படும் என்று அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்துள்ளார். [ஒ-ரி]

வி. ரி. அன் சன்ஸ் ஸ்தாபனத்தாரின்

பொங்கல் வாழ்த்துக்கள்

யாழ் நகரில் 42 வருட அனுபவம் கொண்ட மிகவும் பிரசித்தி பெற்ற

பல் கட்டி வரும், கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கி வரும்

நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்



வி. ரி. அன் சன்ஸ்
உரிமையாளர்: Dr S. REGI
(B. M. C. க்கு முன்பாக)
No 302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/1207)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sisil குளிர்சாதனப் பெட்டி, Guitar, அல்மாரி, கட்டில், Typewriter, Formicaகவுண்டர், Iron Safe, Fan, Toaster, Glassware, Show-Case, கண்ணாடி, மேசை, செற்றி, Mixer, 10' நீள மேசை மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 343, பருத்தித்துறை வீதி, நல்லூர், அரசடிச் சந்தியருகில்.
[8690]

நல்ல பாவிப்பில் உள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டியும், திண்டுக்கல் ஒற்றைக் கதவு, பேபி சைஸ், இரும்புப் பெட்டி ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு. யாவும் எலக்ரோ பிளேற்றேர்ஸ் No 7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம்.
(8880)

மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோயில் அருகாமையில் உள்ள 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ. மாணிக்கசுந்தரம், கோணபுலம் வீதி, மல்லாகம்.
(8872)

அலுமினியத் தொழிற்சாலையில் சிறு பழுது அடைந்த பாத்திரங்களும், புதிய பானைகளும் தைப்பொங்கலை முன்விட்டு மலிவு விலையில் விற்கப்படும். காலம்: 10-1-1989 தொடக்கம் 14-1-89 வரை. இடம்: பேன் உலோகத்தொழிற்சாலை, 60 பணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்) (8874)

### பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு

அழகிய கலப்பற்ற உயர் இன பொமனேரியன் ஆண், நாய்க்குட்டி (Wormed and Weaned) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- து. வைத்தீஸ்வரன், மானிப்பாய், (இந்துக் கல்லூரி ஆண்கள் பாடசாலைக்கு முன்)
[8882]

### வீணைக் குடம் (சுரக்காய்) விற்பனைக்குண்டு

வீணைக்குடம் (சுரக்காய்), அலுமினியம் விற்பனைக்குண்டு. சிவன் மாளிகை, மாரி அம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(8866)

### கோழிக்குஞ்சு விநியோகம்

**Uplands Farm**

(Dekalb) இன பிறவுன் பேட்டுக் குஞ்சு பிறவுன் சேவல் குஞ்சு, கறுப்பு (பிலிமத்) புள்ளி சேவல் (Cobb) இன புரொயிலர் குஞ்சு (28-1-89) சனிக்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது (மரெக்ஸ்) தடுப்பூசி போடப்பட்டது. முன்கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், (சூராவத்தை றோட்டு) சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்)
[8877]

### கோழிக்குஞ்சு விநியோகம்

**Uplands Farm**

Uplands Farm ஒவ்வொரு வாரமும் வெள்ளை சேவல்குஞ்சு கறுப்பு (பிலிமத்) வரி சேவல் குஞ்சு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல:9 கந்தையாலேன் சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்). (8853)

### விஞ்ஞானம்

வெளிவந்து விற்பனையாகின்றது ஆரம்ப விஞ்ஞானம் ஆண்டு 4, 5, 6, சகுரியலை M.C பிரான்சிஸ் (முன்னைநாள் இந்துக்கல்லூரி ஆசிரியர்) N J ஞானப்பொன்ராஜ் (சென்ஜோன்ஸ் கல்லூரி) யாழ்ப்பாண முன்னணி கல்லூரிகளின் முக்கிய பாட நூல். கல்லூரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் கழிவுவழங்கப்படும். வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(8590)

## தேவை

பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு கனரக வாகனம் செலுத்தக்கூடிய நற்குண ஒழுக்கமுள்ள 40-50 வயதிற்குட்பட்ட சாரதி உடன் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். விபரங்களுக்கு விளம்பர இல: 431. மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
[C-1300]

### உடன் தேவை

வீடியோ படப்பிடிப்பில் அனுபவமுள்ளவர் உடன் தேவை. திறமைக்கேற்ப (மாதச்சம்பளம்) வழங்கப்படும். மிக்சரும் போடக்கூடியவராய் இருந்தால் நல்லது. (சம்பளம்) 1500/- மேல் கொடுக்கப்படும் நேரில் பேசிக்கொள்ளலாம். றீகல் வீடியோ, ஈச்சமோட்டை பீச் றோட், யாழ்ப்பாணம்.
[8879]

Fitters, Fitters Helpers, இன்ஜினியரிங் அப்பிரன்டிஸ் (வேலை பயிலுனர்) உடன் தேவை, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சாரதா என்ஜினியர்ஸ், 526. ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம்.
(8683)

## மணமகன் தேவை

G. C. E. (O/L) வரை படித்த 31 வயது நிரம்பிய சைவபோசனப் பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றார்கள். சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விபரங்களுக்கு 423. C/o உதயன். (8854)

### சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Samy & Co அருகாமையில்) (C-945)

### தரமான வீடியோ ஓடியோ

கசற்றுகளை றெக்கோடிங் செய்வதற்கும், தரமான புதிய திரைப்படங்களை உடனுக்குடன் வாடகைக்குப் பெறுவதற்கும் 'லிலியா' உங்கள் நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் ஏற்றபடி சேவையாற்றுகிறார்கள் Liliya Video Club and Audio Recording Bar, 2, Model Market Upstair, Thirunelvely
(8859)

### வர்த்தகம் A/L 89/90

இ. இரட்ணம் ஆரம்பம் 90-ஞாயிறு 14-1-89 4-00 மணி 89 விளுவிடை வகுப்பு ஞாயிறு 5-00 மணி 211/21, கோயில் வீதி, நல்லூர்.
[8881]

### A/L 89 இரசாயனம்

108, Brown Road A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் புதிய பிரிவு ஆரம்பம்; (15-1-89) ஞாயிறு 12-30 p m Organic and Inorganic (சனி, ஞாயிறு 12-30 p.m to 2-30 p.m) பௌதிக இரசாயனம் ஆரம்பம் 17-1-89 செவ் 6 45 a.m (செவ், வியா, 6-30 a m to 8-15) a.m நேரில் விபரங்கள்.
[8870]

### இலவசக் கல்வி

இலவசமாக ஆங்கிலம் பேச, Spoken English எழுத தமிழுடன் ஒப்பு நோக்கி, இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியரால் [சட்டத்தரணி] அவரது இல்லத்தில் கற்பிக்கப்படும். பொங்கலன்று ஆரம்பிக்கப்படும். சகலரும் கலந்து கொள்ளலாம். கா. லோகசுந்தரம் பெரியரசடி, சாவகச்சேரி. (8693)

### விசேட பயிற்சி வகுப்புகள்

புதிய பிரிவுகள் றேடியோ, ரெலிவிஷன், டெக், வயறிங், வெல்டிங், பிளம்பிங், றிவைண்டிங், குளிரியல் மோட்டோர் மெக்கானிசம் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. Nesta Technical Institute 59, Station Road, Jaffna. (8682)

### வீடு வாடகைக்கு உண்டு

அல்வாய் தெற்கில் தங்குவதற்கு இரண்டு வீடுகள் சகல வசதிகளுடனும் உண்டு. வாடகை தேவையில்லை. வீட்டை பராமரிக்கக்கூடிய குடும்பத்தவர்கள் விரும்பப்படுவர். தொடர்பு கொள்ளவும். 427, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8864)

### தவறிவிட்டது

த. ஞானச்சேந்தன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 682770406 V வட்டுக்கோட்டைக்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(8873)

எனது அடையாள அட்டை No685191679V தொலைந்து விட்டது கண்டெடுத்துத்தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ஐடியல் ஏஜன்சி 267B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[8876]

---

## சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டுள்ளது). சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தில் 5430 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூ. 250/- சங்கத்தில் செலுத்தி கேள்விப் பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

19-01-89 வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்.
சுன்னாகம்,
12-01-89 (C/1311)

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திகை அழைப்பும் நன்றி நவிலலும்- 15-01-1989



திருபதி நாராயணசாமி செல்லமுத்து

தோற்றம்: 03-06-1924 மறைவு: 16-12 1988

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குலம் வளர உழைத்த எங்கள்
அன்புத் தாயே!
உங்கள் உருவம் வழிகாட்ட
உங்கள் உழைப்பு உயிரூட்ட
வாழ்ந்திடுவோம்
உங்கள் நினைவு மாறுமல்
உத்தமியே உங்கள் ஆன்மா
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்
கண்ணீர்க் கடலினிலே

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பலவழிகளிலும் உதவி நல்கியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் 15-01-1989 இல் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (8698)

---

## VACANCY

Applications are Invited from suitable applicants for the post of
COMPUTER INSTRUCTOR/ INSTRUCTRESS

QUALIFICATIONS: Applicant should be Posses; Diploma in system analysis and programming Knowledge in programming Basic Dbase III plus, Lotus 1, 2 & 3, languages and I B M system operation with MS Dos will be added qualification.

SALARY: 2500/- and above depends on the applicants merit. Apply on or before 18 th January, 1989.

432, C/o Uthayan Publication [pvt] Ltd, Jaffna.
(C/1312)

---

உங்கள் எல்லோருக்கும் "உஷா சினிமாவின்"

## பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

எமது நேற்றைய மகத்தான வெளியீடு!

உஷா சினிமா

✶ விஜயகாந் ✶ ராதிகா ✶ மாதுரி ✶ பாண்டியன் ✶ S. S. சந்திரன்

நடித்த

## தென்பாண்டிச் சீமையிலே

[ஒறிஜினல் பிரதி]

உஷா சினிமா

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[8696]

---

## அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை வரியிறுப்பாளர்களுக்கு

1989 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை பிரதேச சபை உப-அலுவலகங்களில் (சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை. அராலி) உரிய காலத்துற்கு முன்பதாக செலுத்தி சபையின் அபிவிருத்திக்கு உதவுங்கள்.

4 கந்தாயங்களுக்கும் 31-01-1989 சிகு முன் செலுத்துபவர்களுக்கு 10 வீத கழிவு வழங்கப்படும்.

ஒவ்வொரு கந்தாயத்திற்கும் முதல் மாதம் முடிவதற்கு முன்பதாக செலுத்துபவர்களுக்கு 5 வீத கழிவு வழங்கப்படும்.

விபரங்களை பிரதேச சபை உப அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம்

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்,
C/1307 வலிகாமம் மேற்கு பிரதேசசபை,

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திரு. சண்முகம் சிவசம்பு
(உரிமையாளர், சிவலக்ஷ்மி கபே)

உதிப்பு: 13-06-1902 இறப்பு: 12-01-1985

இல்லற விளக்கே! நீர் எம்மை விட்டுப் பிரிந்து நான்காண்டுகள் மறைந்து விட்டன. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

அன்னம்மா சிவசம்பு

அன்னலக்ஷ்மி,
சிவலக்ஷ்மி கபே,
66 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (8685)

---

# சக்கர வண்டிகள் பெறவுள்ள அங்கவீனர்

யாழ்ப்பாணம், ஜன. 13

அங்கவீனமுற்ற பலருக்கு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலக சமூக சேவைப்பகுதியின் உதவி அத்தியட்சகர் திருமதி கமலா சிவசிதம்பரம் மேற்கொண்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக நேற்று யாழ் செயலகத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஐவருக்கு சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் பல சக்கர வண்டிகளைப் பெறவுள்ளோரின் விவரம் வருமாறு.

1. சங்கானை உதவி அரசாங்க அதிபர்பிரிவில் செல்வன் கந்தசாமி தொல்புரம்— மூச்சக்கர வண்டி.

2. கரவெட்டி உ. அ. அ. பிரிவில் திரு. பரராஜசிங்கம் பாலசுப்பிரமணியம் வதிரி— முச்சக்கர வண்டி.

திரு. பொன்னையா சர்வேஸ்வரன் கரவெட்டி மேற்கு, சக்கர நாற்காலி.

பருத்தித்துறை உ. அ. அ. பிரிவில்

1. சிவபாதம், ஆத்மசேரன், புலோலி மேற்கு, சக்கரநாட்காலி.

2 கந்தையா நவரத்தினராசா, தும்பளை முச்சக்கரவண்டி

3. கமலாம்பிகை, சுப்பிரமணியம், புலோலி மேற்கு, சக்கரநாற்காலி.

மருதங்கேணி உ. அ. அ. பிரிவில் 1. சேதுராமன், லோகேஸ்வரன் உடுத்துறை தெற்கு, முச்சக்கர வண்டி.

சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் 1. இந்திராணி பத்மநாதன், மட்டுவில் தெற்கு, — முச்சக்கர வண்டி.

2. சுப்பிரமணியம் ஸ்ரீகரன்; கைதடி சக்கர நாற்காலி.

கோப்பாய் உ. அ. அ. பிரிவில் அரியநாயகம், சத்தியாதேவி உரும்பராய், செல்லத்துரை சுதா புத்தூர் மேற்கு, —சக்கரநாற்காலி.

உடுவில் உ. அ. அ. பிரிவில் மாட்டீன் பற்றிக் ஏழாலை மேற்கு முச்சக்கர வண்டி.

தெல்லிப்பழை உ. அ. அ பிரிவில் கார்த்திகேசு விமலநாதன் கொட்டைக்காடு—சக்கர நாற்காலி

ஊர்காவற்றுறை உ. அ. அ. பிரிவில் கணேஷ் வேகவனம் நாரந்தனை மேற்கு- முச்சக்கரவண்டி

இவற்றை வழங்குவதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். (இ-10)

# வளர்மதி வெற்றி

கொக்குவில், ஜன 13

யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகம் நடத்திய மென் பந்து எறி பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில், 'சென்றலைட்ஸ்' விளையாட்டுக் கழகத்துடன் மோதி, கொக்குவில் வளர்மதி சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

உரும்பராய் விளையாட்டுக் கழகம் நடத்திய எறிபந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் வளர்மதி விளையாட்டுக்கழகம் சம்பியனானது குறிப்பிடத்தக்கது.

இறுதி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் அது போட்டியிட்டு வென்றது. (க 69)

# உலக சமய தினம்

யாழ்ப்பாணம் ஜன 13

உலக சமயதின வருடாந்த அனுட்டான நிகழ்ச்சி யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அனுட்டிக்கப்படும்.

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ் கல்விப் பணிப்பாளர் திரு வே. சபாநாயகம் கலந்து கொள்வார்.

பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ் வைபத்துக்குத் தலைமை வகிப்பார்.

இந்து சமய சார்பில் சுவாநிதி ப கோபாலகிருஷ்ணனும் கிறிஸ்தவ சமய சார்பில் கரவையூர் செல்வமும் இஸ்லாம் சமய சார்பில் ஜனாப் எம். எஸ் அமானுல்லாவும் பஹாய் சமய சமய சார்பில் திரு க. செ. சுவர்ணராஜ் உம் சொற் பொழிவாற்றுவார்கள். (ச)

# கள்வரைப் பிடிக்க இளைஞர் நடவடிக்கை

ஊர்காவற்றுறை, ஜன. 13

தற்போது விளைந்த நிலையில் உள்ள வெங்காயம் மற்றும் தேங்காய்களைத் திருடிவரும்இராக் கள்வர்களை பிடிப்பதில் சுருவில் இளைஞர்கள்தீவிரமாய் உள்ளனர்.

இப் பகுதியில்அதிகளவு வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடையாகும் நிலையிலுள்ளது.

தேங்காய் விலையும் அதிகரித்துள்ளது எனவே இவற்றைத் திருடி பணம் சேர்ப்பதில் சில திருடர்கள் கடந்த சிலகாலங்களாக ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளின் முறைப்பாட்டைத் தொடர்ந்து சுருவில் இளைஞர் சங்கத்தினர் ஒழுங்கு பிரகாரம் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் பின்னர் கள்வர் நடமாட்டம் பூரணமாக நீங்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-16)

---

## CHUNDIKULI GIRL'S COLLEGE

Vocational Institute

Applications are called from those who wish to register for the following courses-

1. Computer Programming - Basic Word Processing and Application of Dbase III plus, Practicals on I. B. M. P. C. Computers:
2. Pitman's Shorthand, Typing and Book-keeping:
3. Home Economics - Scientific Dress Making, Machine Embroidery, Flower making Cakes and Icing General cookery, Handicrafts and Hair styles.

PRINCIPAL-

(C/1129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஃஃ வளர்மதி முன்னேற்றக் கழக வெள்ளிவிழா சிறப்பிதழ் ஃஃ

# விளையாட்டுக் கழகமாக ஆரம்பிக்கப்பட்டு

# இன்று பல்துறைகளிலும் மிளிரும் வளர்மதி




கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக கட்டடத்தின் தோற்றம்

## 25 வருடகால குறுகிய வரலாற்றில் சரித்திரம் படைத்த சாதனைகள்

ஈழத்திரு நாட்டின் இனிய தமிழ் யாழ் நகரிலே கொக்குவில் பதியினில் நன்னெறியிலே நின்று சமுதாயத்திற்குப் பெரும் பணியாற்றி வரும் எமது வளர்மதி முன்னேற்றக்கழகம் எப்படி உருவாகியது என்பதை நாம் கடந்து வந்த எமது பாதச்சுவட்டில் மிதிபட்டுப் போன அச்சம்பவங்களைத் திருப்பிப் பார்ப்போமாக.

எமது கழகம் 1963 ஆம் ஆண்டு விளையாட்டுலகில் சிறுநடை பயில ஆரம்பித்தது. விளையாட்டுக் கழகத்திற்கு வளர்மதி எனத் தீர்க்க தரிசனத்துடன் பெயரிட்டனர்.

கிரிக்கெட் விளையாட்டில் ஆரம்பமாகி பல இல்ல விளையாட்டுப் போட்டிகளையும், நாடகங்களையும் (சாக்கிரட்டீஸ்) நடத்தினர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த கழகம் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகள் ஈட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கழகம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை 1973 ஆம் ஆண்டு கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடி பலரது பாராட்டையும் பெற்றது.

நீண்டகாலமாக எமது பகுதிக்கு ஓர் சனசமூகம் இல்லாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு எமது சனசமூக நிலையம் சிவநெறிச் செல்வர் க. கனகராசா அவர்களால் 12-9-1975 ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கழகம் தனக்கென ஒரு சொந்தக்கட்டடத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்ற கழக இளைஞர்களினது விருப்பத்திற்கிணங்க பெருமதிப்பிற்குரிய அமரர் திரு இ. இராசரத்தினம் அவர்களிடம் சென்று எமது கழகத்திற்கு ஓர் கட்டடத்தைக் கட்டுவதற்கு ஒரு துண்டுக் காணியைத் தந்துதவுமாறு தயக்கத்துடனேயே கேட்டோம். அவர் மறுப்பேதுவுமின்றி இன்முகத்துடன் நாம் எதிர்பார்த்த அளவை விடக்கூடுதலான அளவு காணியையும் கட்டடத்தைக் கட்டுவதற்குச் சிறு தொகைப் பணத்தையும் தந்துதவினார்.

அன்னார் இன்று எம் மத்தியில் இல்லாவிட்டாலும் அவர் இவ்வூருக்கும் எமது கழகத்திற்கும் செய்த ஒப்புயர்வற்ற சேவையால் எம்மக்கள் மத்தியில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டு விழாவும் அறிவகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் 9-10 1976 அன்று ஸ்ரீராம கிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியில் பட்டிமன்றம் நடன நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. அதன்பின் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி கழகக் கட்டடத்திற்குரிய அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது.

ஊர்மக்கள் பாராட்டும் வண்ணம் பெரிய அளவிலான கட்டடத்தைக் கட்டி முடித்து 1982 ஆம் ஆண்டு கழகம் தனது பத்தொன்பதாவது ஆண்டு விழாவையும் கட்டடத் திறப்பு விழாவையும் கலை நிகழ்ச்சி, பட்டிமன்றங்கள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடியது.

1984 ஆம் ஆண்டில புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பிக்கப்பட்டவுடன் சனசமூக நிலையம் புதுப் பொலிவு பெறத் தொடங்கிற்று. 1985 ஆம் ஆண்டில் ஓர் சிறுவர் பாடசாலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1986 இல் நடன, சங்கீத பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டு சிறப்புடன் நடைபெற்று வருகின்றன

1987 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது மக்கள் எமது சனசமூக நிலையத்திற்கு அருகிலுள்ள ஆலயமான மாத்தனை முருகன் கோயிலிலும் எமது கழக மண்டபத்திலும் தஞ்சம் புகுந்தபோது எம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு அளித்துதவியது மட்டுமல்லாமல் ஓர் தற்காலிக வைத்தியசாலையையும் அமைத்து காயமுற்றோருக்கும் நோயுற்றோருக்கும் சிகிச்சையளித்து உதவி புரிந்தோம்.

இந்த அசம்பாவிதத்தில் வீட்டை இழந்த இரண்டு ஏழைக் குடும்பங்களுக்கு ஏனைய பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

எமது வெள்ளி விழாவை முன்னிட்டு பல போட்டிகளை நடத்தியதோடு வெள்ளிவிழா மலரையும் வெளியிட்டுள்ளோம்.

எமது வெள்ளி விழாவை 12 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரை கொண்டாடி எமது எதிர்காலத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம் இதன் வரிசையில் மாதர் சங்கம், விவசாயக்கழகம், கைத்தொழில், சிறுகைத்தொழிற் பயிற்சி சாரணியம் போன்றவற்றையும் ஆரம்பிக்க உள்ளோம்.

வளர்மதி அதன் அங்கத்தினர்கள் ஆதரவாளர்களுக்கு எந்தெந்தத் துறையில் விருப்புண்டோ அவ்வத்துறையில் பயிற்சியளித்து அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவி செய்து தனது பெருமையை நிலைநாட்டத் திட்டமிட்டுள்ளது.

ஆரம்பகாலத்தில் அங்கத்தவர்களே திட்டமிட்டு நிதி திரட்டி இதை வளர்க்க வேண்டிய நிலையில் இருந்தனர் அன்று எவ்வளவுதூரம் நிதி நெருக்கடி இருந்தது என்பதை அன்றைய அங்கத்தவர்களால்தான் உணரமுடியும். ஆனால் இன்று நிலைமை மாற்றமடைந்து உள்ளூர்ப் பெரும் கொடைவள்ளல்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளிவிழாக் குழு

## வாழ்த்துகின்றோம் வளர்மதியை!

தமிழொடு சைவம் தழைத்தினி தோங்கும்
எமதரும் பதியாம் கொக்குவில் கிழக்கில்
இளைஞர் பலரின் இடைவிடா முயல்வில்
விளைந்த வளர்மதி சனசமூ கம்தன்
வெள்ளி விழாவில திளைக்குமிவ் வேளையில்
உள்ளூர்ப் பணிகளில் ஆற்றிய பங்கினை
உள்ள உள்ள உவகை யாலுளம்
துள்ளிக் குதித்துப் பெருமிதம் கொள்ளுது
இருபத் தைந்து ஆண்டின் முன்னே
விளையாட் டுக்கென விளங்கிய கழகம்
காலப் போக்கில் கலைப்பணித் துறையிலும்
நூலகப் பணியிலும் அக்கறை காட்டி
கலைபல சிறந்திட கல்வி செழித்திட
கலைத்துறை நிகழ்ச்சிகள் கணக்கில நடத்தியும்
அறிவுத் துறையினில் ஆர்வம் கொண்டு
சிறுவர் பாட சாலை நடத்தியும்
இசையும் கூத்தும் வேட்கும் சிறார்க்கு
குறைவற அவற்றைக் கொடுத்திட வென்று
வாரந் தோறும் வகுப்புகள் நடத்தி
ஊரில் எங்கணும் முத்தமிழ் பரப்பியும்
சிரமதானச் செயல்களால் ஊரின்
ஒழுங்கை கோவில் பாட சாலை
துப்புர வாக்கிச் செப்பஞ் செய்து
ஒப்பிலாப் பணிகள் உவப்புடன் இயற்றியும்
அண்மைய வன்முறை நிகழ்வினால் மக்கள்
தஞ்சம் புகுந்த போதவர்க் கெல்லாம்
உறையுளும் உண்டியும் இலவச மருந்தும்
குறைவறக் கொடுத்தவர் துயரினைத் துடைத்
இலவினை இழந்து அல்லலுற் றோர்க்கு தும்
நல் வாழ் வளிக்கும் நவநோக் குடனே
சிரம தானமாய் எம்மூர் இளைஞர்
இரண்டு இல்லம் அமைத்து அளித்தும்
ஆண்டுப் பிறப்பு பொங்கல் விழாக்கள்
போன்ற வற்றினைப் போற்றி செய்தும்
ஊரின் ஏற்றம் உள்ளத் திருத்தி
நாளும் பணிசெயும் எமது இளைஞர்
வருங்கா லத்தும் வளர்மதி வழியாய்
அரும்பணி ஆற்றித் தமிழும் சைவமும்
தண்டமிழ்க் கலைகளும் வளர்த்திட
எம்முள மார வாழ்த்திடு வோமே.

[வெளிநாடுகளில் வதியும்
கழக அங்கத்தவர்கள்]

## றோட்டறிக் கழகம் ஆசி

பொதுநல சேவையில் தொடர்ச்சியாகப் பணியாற்றி இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்வது சாதாரணமான ஒரு நிகழ்ச்சியல்ல. கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் பல் துறையிலும் மனித குல மேம்பாட்டுக்காகச் சேவையாற்றி, இச் சாதனையை நிலைநாட்டி வெள்ளி விழாக் கொண்டாடுவது பெருமைக்கும் பெருமகிழ்ச்சிக்குமுரிய விடயமாகும்.

யாழ். றோட்டறிக் கழகமும் இவர்களது பொதுநலப் பணிகள் சிலவற்றில், குறிப்பாக அண்மைய யுத்த காலத்

(4ம் பக்கம் பார்க்க)

## தங்கள் சேவை வெல்லட்டும்

தங்கள் நிறுவனத்தின் 25 ஆம் வருட நிறைவினைக் குறிக்கும் இந்த வெள்ளி விழாவினைக் கொண்டாடுவதில் தாங்கள் காணும் திருப்தி மகிழ்வில் ரி ஆர் ஆர். ஓவும் கலந்துகொள்ள விரும்புகிறது.

25 வருட காலம் என்பது ஒரு தலைமுறைக் காலம். ஒரு தலைமுறை ஒரு நிறுவனம் நின்று நிலைத்துள்ளதென்றால், ஆர்வமுள்ள இலட்சியதாகமுள்ள, செயல் வேகமுள்ள மனிதர்கள் அதில் பங்குபற்றி அதனை வழிநடத்தியிருக்கவேண்டும்.

நினைக்கவே சிலிர்க்கின்றது.

தங்கள் சாதனைக்கு எங்கள் வணக்கங்கள்.

தங்கள் சேவையில் நான் காணும் மிக முக்கிய சிறப்பு, தாங்கள் சாதாரண காலத்திலும், குழப்ப காலத்திலும் காலத்தின் தேவைக்கேற்ப பணியாற்றியுள்ள, ஆற்றல் முறைமையாகும்.

குடிசைகள் கட்டுவதற்கெனத் தாங்கள் நடத்திய செயற்திட்டம் மிக வரவேற்கத் தக்க ஒன்று.

25 வருடங்கள் 50, 100 வருடங்களுக்கு நீளட்டும்.

தங்கள் சேவை வெல்லட்டும்.

இச் சேவைகளுக்கான தன்னலமற்ற மனிதர்கள் தொகை பெருகட்டும்.

கா சிவத்தம்பி,
தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்;
106, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

## கொக்குவில் இந்து ஆசி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். கிராம முன்னேற்றத்திலும் கிராம மக்களின் கல்வியறிவை மேலோங்கச் செய்வதிலும் இக்கழகம் ஆற்றிவரும் பணி அளப்பரியது.

எம் கிராம மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து மக்களின் கல்வி வளர்ச்சிக்காக இலவசமாகப் பாட போதனைகளை நடாத்தியும் சிரமதானப் பணிகளிலும் இக்கழகம் முன்னின்று உழைத்து வருகிறது. வருடந்தோறும் விளையாட்டுப் போட்டிகளை நடாத்திப் பரிசில்களை அளித்து இளஞ் சந்ததியினரின் உடல், உள வளர்ச்சியில் அக்கறை காட்டி வருகின்றது. ஊருணி நீர் நிறைந்து பயன்படுதல் போல மக்களுக்குப் பயன்தரும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது இக்கழகத்தின் நிர்வாகிகளாக விளங்குவோரின் கூர்ந்த மதியினால் இதன் செயற்பாடு எல்லோராலும் மெச்சக் கூடிய வகையில் அமைந்து காணப்படுகிறது இக்கழகம் பல்லாண்டு நடைபயின்று மக்களுக்குப் பயன்தரும் செயல்களில் மேன்மேலும் ஈடுபட்டுழைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அ பஞ்சலிங்கம்
அதிபர்
(கொக்குவில் இந்துக் கல்லூரி.)


வெள்ளிவிழா
சிறப்புற
வாழ்த்துகின்றோம்
ராஜ் போட்டோ
நந்தாவில்
கொக்குவில்.



வெள்ளிவிழா காணும்
வளர்மதியே வாழ்க!
நிதித்துறையில் உங்களின் நண்பன்
SU
ஷப்ரு யுனிக்கோ
பினன்ஸ் லிமிட்டெட்
207, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.



வளர்மதி மேலும்
வளர வாழ்த்துகிறோம்
இராசா றைஸ் மில்
கொக்குவில்.



வளர்மதியை
வாழ்த்துகின்றோம்
FORTUNA ENTERPRISES
(Labour Licence No 79)
Immediate Vacancies in Kuwait
உடனடி வேலை வாய்ப்புக்கள்
குவைத்
1. Airport and Hospital Cleaners
விமான நிலைய, ஆஸ்பத்திரி
சுத்திகரிப்பாளர்
சம்பளம் 35 KD
★ விசா வந்த பின்பும் பணம் கட்ட ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
நாட வேண்டிய முகவரி,
யாழ்ப்பாணப் பிரதிநிதி,
இ. விஸ்வேஸ்வராயன்
3 ஆம் கட்டை லேன்,
கே. கே, எஸ். வீதி.
கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட விரோத

# மாட்டிறைச்சிக்கடைகளை மூடிவிடும்படி அறிவிப்பு

ஊர்காவற்றுறை ஜன 13

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் ஊர்காவற்றுறை, நாரந்தனை ஆகிய அலுவலகங்களின் எல்லைக்குள் உள்ள சட்ட விரோத மாட்டிறைச்சிக் கடைகளை உடனடியாக மூடிவிடும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறன அனுமதியற்ற கடைகளால் அங்கீகாரம் பெற்ற இறைச்சிக் கடைக்காரர்கள் நஷ்டமடைவதாகவும் இதனால் பிரதேச சபை தனது வருமானத்தை இழக்கக்கூடிய நிலையேற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச—16)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் க. பஞ்சலிங்கம்**

(மன்னார் கொக்கோகோலா விநியோகத்தர்)

மலர்வு: 4 - 5 - 1944

உதிர்வு: 25 - 1 - 1988

திதி: 13. 1. 1989

ஆண்டொன்று பறந்திடினும்
மாண்புமிகும் உங்கள் உருவை
பாசம் மிக்க எம்மால் எப்படி
மறந்திட முடியுமய்யா!
அன்று நீங்கள் செய்த சேவை
என்றுமே எம் நினைவை விட்டு
அகலுமோ ஐயா!
பூமரத்தில் பூத்திருந்த தனிப் பூ
அல்லவே நீங்களய்யா
சோலையில் மலர்ந்திருந்த
பூஞ்செடி தானே!
காலன் உமை அழைக்கு முன்னே
காவனிடம் அனுப்பி வைத்தனரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், உறவினர்கள்.

சின்னக்கடை,
மன்னார்.

(9151)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பூலோகரத்தினம் பரமானந்தன், B. A.**

(முன்னாள் ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி)

தோற்றம்: 17 - 05 - 1925

மறைவு: 14 - 12 - 1988

திதி: 13. 01. 1989

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கணவர்: பரமானந்தன்.
பிள்ளைகள்: ஷீலா, பாலகுமார், ஷாந்தி, உமையாளன்.
மருமக்கள்: நிஹால், கிருஷ்ணவேணி.
பேரப்பிள்ளைகள்: ஷாணிகா, நஷிகா.

'மிதிலை'
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

(8841)

## அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு செல்வர்

வடபகுதியைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளுக்கு சிலருக்கு அண்மையில் புலமைப்பரிசில்களும் வெளிநாடுகளில் கருத்தரங்குகளில் கலந்துகொள்வதற்கான அழைப்புக்களும் கிடைத்துள்ளன.

மன்னார் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. என். இராசநாயகம் திட்டமிடல் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொள்ள ஹைதராபாத் செல்லவுள்ளார்.

மன்னார் மாவட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஜெயரத்தினம் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக இஸ்ரேல் செல்லவுள்ளார்.

வவுனியா திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். இரங்கராஜன் புலமைப் பரிசில் பெற்று ஜப்பான் செல்லவுள்ளார். [ஒ-5]

# நல்லொழுக்கக்கோவை

அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள நல்லொழுக்கக் கோவையின் அடிப்படையில் இங்கும் நல்லொழுக்கக் கோவை தயாரிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

அமெரிக்காவில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள், உடைமைகள், Blind Trust' என்ற அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அந்த அமைப்பினூடாகத்தான் எம்பிக்களாக இருக்கும் வரை அவர்கள் நிதி, சொத்து சம்பந்தமான விவகாரங்களைக் கையாள முடியும்.

குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஒரு எம்பிக்குப் பணம் தேவைப்பட்டால் அவர் Blind Trust இடம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதனை. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நல்லொழுக்கக் கோவையிலும் சேர்ப்பது பற்றி ஆராயப்படுகிறது. இந்த நல்லொழுக்கக் கோவையைச் சட்டபூர்வமானதாக்கவும் அரசு கருதுவதாக தெரிகிறது

புதிய நாடாளுமன்றம் வருகிற 15இல் தெரிவானதும் இந்த நல்லொழுக்கக் கோவையும் அமுலுக்கு வந்துவிடும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## பளை மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம், ஜன 13

அண்மையில்வெளியான ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் பளை மகா வித்தியாலயத்திலிருந்து 69 சத விதமான மாணவர்கள் பல்கலைக்கழகம் புகும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

இம் மகாவித்தியாலத்திலிருந்து 1986 ஆம் ஆண்டு ஒருவரும் 1987 ஆம் ஆண்டு இருவரும் மருத்துவபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. [ச]

## இடமாற்றம்

நெடுந்தீவு ஜன 13

நெடுந்தீவு மகா வித்தியாலய உதவி ஆசிரியராகவும் கொத்தணி அதிபரின் உதவியாளராகவும் கடமையாற்றிய ஆசிரியர் திரு. செ. மகேசு நல்லூர் ஸ்தான சாதன தமிழ் வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க-111)

# பிறப்பு அத்தாட்சிப் படிவம் 'போட்டோஸ்ரட்' பிரதியில்

யாழ்ப்பாணம், ஜன 13

யாழ் செயலக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் படிவங்களை பிரதி செய்வதற்கு 'போட்டோஸ்ரட்' இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1954 ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் படிவங்கள் யாழ் செயலகத்தில் இல்லை.

போட்டோ பிரதி செய்து இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் படிவங்களை வழங்குவதற்காக இரண்டு மாதங்களுக்கு முன்னரே இந்த இயந்திரம் கொண்டு வரப்பட்டிருந்தது

எனினும் கடந்தவாரப் பிற்பகுதியில் இருந்தே இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. (ஓ-5)

# விளையாட்டுக் கழகமாக.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியூர் அங்கத்தினர்கள் ஆதரவாளர்கள் என்போரது ஆதரவு பெருமளவு கிடைக்கும் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது இளைஞர்கள் நன்கு பயன்படுத்தி வளர்மதியின் எதிர்காலத்திட்டங்களை திறம்படச் செயற்படுத்தி தாமும் பயன்பெற முன்வரவேண்டும்.

கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கில் தனது வருடாந்த நிதி அறிக்கையை சமர்ப்பித்த வளர்மதி இந்த வருடம் இலட்ச ரூபாவுக்கு மேற்பட்ட நிதியை அறிக்கையில் இடம்பெறச்செய்து தனக்கெனப் பெருமையைத் தேடியிருக்கின்றது.

இதற்கு உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறும் இக்கட்டத்தில் எமது கழக விஸ்தரிப்புக்கு தற்போதைய கழகக் காணியுடன் தொடர்ந்து இருக்கும் காணியை கொள்வனவு செய்ய முனைந்துள்ளோம் என்பதையும் மகிழ்வுடன் கூறிக்கொள்கிறோம்.

எமது நிதி நிலைமையை மேம்படுத்தி வளம்படுத்தக்கூடிய நிலையில் இருக்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அடுத்த ஆண்டு சேவை மனப்பான்மையுடன் கூடிய பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்று வசதி படைத்த கழக அங்கத்தவர்கள், ஆதரவாளர்களின் உதவியுடன் செயற்படுத்தி முன்னேற வேண்டும்.

இது சாத்தியப்படும் பட்சத்தில் குறைந்தது பத்து அங்கத்தினர்களுக்காவது நிரந்தரமாகச் சிறு வருமானத்தையாவது தேடிக்கொள்ளும் வாய்ப்பை உருவாக்கலாம்.

'முயற்சி திருவினையாக்கும்- முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் முதுமொழிகளைக் கருத்திற்கொண்டு முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம் என்ற உறுதியுடன் செயற்படுவோம்.

வளர்மதியின் வளர்ச்சிக்கு மற்றவரின் பங்கு என்னவென வினவாது எனது பங்கு என்ன, அதை நான் நிறைவேற்றி விட்டேனா? என்று ஒவ்வொருவரும் சிந்தித்தால் 'சிறு துளி பெரு வெள்ளம்' என்றவரை விலக்கணத்திற்கேற்ப வளர்மதி சமுத்திரமாகலாம்.

அத்துடன் வளர்மதியின் வளர்ச்சி மூலம் அயலவர்கள் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்து பெருமைப்பட்டு அன்பும் ஆதரவும் தரக்கூடிய வகையில் செயற்பட்டு வளர்மதியின் பெருமையை மேம்படுத்தி அனைவருக்குமுகந்த ஒரு வளர்மதியாக ஏறுநடை போட நாம் அனைவரும் திடசங்கற்பம் பூணுவோமாக.


# NEW MASTER INSTITUTE

241, Navalar Road, Jaffna. B. M. C. Lane, Jaffna.

## 89 A/L PAPERCLASSES

பிரிவு - I [Saturday & Sunday]

ஆரம்பம் 15- 01- 1989
Sunday 8. 30 a. m

8.30 - 9.30 — Chemistry — திரு. தில்லைநாதன்
9.30 - 10.30 — Physics — திரு. வர்ணம்
10.30 - 11.30 — Zoology — திரு. நாகநாதன்
11.30 - 12.30 — Botany — திரு. குகாதரன்

(C-1227)


## ரேட்டறிக்..-

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இல் பாதிக்கப்பட்டவர்களுக்கென உருவாக்கிய வீடமைப்புத் திட்டத்தில் இணைந்து செயற்பட வாய்ப்புக் கிட்டியதைப் பெருமையாகக் கருதுகிறது; இனியும் தனது பங்களிப்பை நல்கக் காத்திருக்கிறது

எதிர்காலத்தில் இக்கழகம் தனது அரிய சேவையை இதே போன்று மேம்பாட்டையச்செய்ய வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

ந. கருணை ஆனந்தம்,
செயலாளர்,
யாழ். ரோட்டறிக்கழகம்.


## வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1989
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை
## சுழிபுரம்

1989 ஆம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பேரில் எதிர்வரும் 1989-01-31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்; ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் அவற்றிற்கான பதிவுக் கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை தபாலில் அனுப்வோர் பதிவுக்கட்டணத்தை காசோலையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ ''விசேட ஆணையாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்'' என்ற பெயரில் அனுப்பிவைக்கவேண்டும்.

| பொருட்கள் சேவைகள் | பதிவுக்கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள் | ரூபா. 25. 00 |
| 2. சுகாதார சேவைக்கான பொருட்கள் | ரூபா. 25. 00 |
| 3. அச்சிட்ட படிவங்கள் பதிவேடுகள் வழங்கல் | ரூபா. 25. 00 |
| 4. மின்சார பொருட்கள் வழங்கல் | ரூபா. 50 00 |
| 5. 1989 ஆம் ஆண்டுக்கான வாகன தகடுள் தயாரித்தல் | ரூபா. 25. 00 |
| 6. சீருடைக்கான துணிகள் சப்பாத்துக்கள் வழங்கல் | ரூபா. 25. 00 |
| 7. மின்-தூண்கள் வழங்கல். | ரூபா. 50. 00 |
| 8. வீடுகளுக்கு உள்ளக மின் இணைப்பு செய்தல் | ரூபா. 50 00 |

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்.
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

C/1311



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
(சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்)

## 1989 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய
# அறிவித்தல்

1989 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின் படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31 உம், ஏப்ரல் 30 ஆம், ஜூலை 31 ஆம், அக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1 ஆம் கந்தாய வரி மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்பும்
2 ஆம் கந்தாய வரி ஜூன் 30 திகதிக்கு முன்பும்
3 ஆம் கந்தாய வரி செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும்
4 ஆம் கந்தாய வரி டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பும்

செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் பற்றுணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே, வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு, பணிவன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(30-12 1989) [C/1306]



## வலிகாமம் மேற்குப் பிரதேச சபை-சுழிபுரம்
## 1989 ஆம் ஆண்டிற்கான
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடும் சந்தைக்கு, சந்தைக் கடைகளுக்கு கருவாட்டுக் கடைக்கு சில் வைத்த கேள்விகள் 25 - 01 - 1989 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விகள் ''விசேட ஆணையாளர், வலிகாமம் மற்குப் பிரதேச சபை, சுழிபுரம்'' என்ற முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும்.

கேள்விப் படிவங்கள் 23 - 01 - 1989 ஆம் திகதி பிற்பகல் 2-00மணி வரை உரிய கட்டணங்களைச் செலுத்தி சுழிபுரம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இடம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த தொகை ரூ. ச. | கேள்வி வைப்பு ரூ. ச. | கேள்விப் பத்திர பணம் ரூ ச. |
|---|---|---|---|---|
| சங்கானை | மரக்கறிச் சந்தை | 35,000 00 | 250. 00 | 25. 00 |
| சங்கானை | மீன்சந்தை | 30,000. 00 | 250. 00 | 25. 00 |
| சுழிபுரம் (சத்தியக் காட்டுச் சந்தை) | கருவாட்டுக் கடை | 500. 00 | 50. 00 | 25. 00 |
| சுழிபுரம் (அலுவலக கட்டிடம்) | 1ஆம் இல கடை | 60,000. 00 | 250. 00 | 25. 00 |
| | 5ஆம் இல. கடை | 40,000. 00 | 250. 00 | 25. 00 |

குறிப்பு:

சந்தைகள், கருவாட்டுக் கடைகள் குத்தகைக்கு விடப்படும் காலம் 01 - 02 - 1989 தொடக்கம் 31 - 12 - 1989 வரை.

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலி. மேற்குப் பிரதேச சபை.

(C1308)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MAXELL

MAXELL உற்பத்திப் பொருட்களை முதன்முறையாக வடமாகாணத்துக்கு அறிமுகமாக்கி கசட்உலகின் சாதனையை ஏற்படுத்தியவர்கள். எம்மிடம் சகலவிதமான கைக்கடிகார, கமரா, கல்குலேட்டஸ், பற்றிவகைகள், பலரகமான (ஓடியோ, வீடியோ) கசட் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், (B) பியூட்டிக்குறு (ஒறிஜினல்) பவுடர், கலர்சுருள்வகை (Film Rolls) "மைடின் கால்மேஸ்" வகைகள் நிதான விலைகளில் பெற்றுக்கொள்ள.

யாழ் மாவட்ட விநியோகத்தர்கள்

**MAXALL HOUSE**

மக்ஸ்சல் கவுஸ்
No 20, JUBILEE BAZAAR,
JAFFNA.
(ராணி சினிமா அருகாமை)
(8691)


## பீடாதிபதிகளை ஜனாதிபதி சந்திப்பார்

கொழும்பு, ஜன 13

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளான சிறிமல்வத்தை ஆனந்த தேரர், பலிப்பான சந்தானந்த தேரர் ஆகியோர் புதன் மாலை பிரதமரின் வாசஸ்தலத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசினர்.

அப்போது ஜனாதிபதி சொன்னதாவது:

அரசாங்கத்தையும், நாட்டையும் வழிநடத்த வேண்டியது மகாசங்கத்தின் கடமை.

நாட்டைப் பாதிக்கும் முக்கிய விஷயங்களிலும் மகாசங்கத்தினதும், ஏனைய மதப் பிரமுகர்களினதும் ஆலோசனைகளை நான் கேட்பேன்.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

## உடன்பாடு

பொகொடா, ஜன 13

எம்-19 என்ற பெயருள்ள பிரதான கெரில்லாக் குழுவுடன் கொலம்பியா அரசு நேற்று உடன்பாடு ஒன்று செய்து கொண்டது.

கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஏனைய குழுக்களையும் சமரசத்துக்கு வரும்படி கொலம்பியா அரசு வேண்டுகோள் விடுத்தது. (எ)

## சோவியத்தில் எயிட்ஸ்

மாஸ்கோ, ஜன 13

சோவியத் யூனியனில் 416 பேருக்கு எய்ட்ஸ் நோய் பிடித்திருப்பதாக மாஸ்கோ வானொலி அறிவித்தது.

இவர்களில் 112 பேர் சோவியத் பிரசைகள் 334 பேர் வெளிநாட்டவர் வெளிநாட்டவர் அனைவரும் நாட்டை விட்டுச் சென்று விட்டனர் என்றும் வானொலி தெரிவித்தது. (எ)

### பருத்தித்துறையில்

## நூல்வெளியீட்டு அரங்கு

பருத்தித்துறை, ஜன 13

டாக்டர் எம். கே. முருகானந்தனின் 'தாயாகப் போகும் உங்களுக்கு', 'எயிட்ஸ்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு அரங்கு 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு டாக்டர் க. சுகுமார் தலைமை வகிப்பார்.

தெணியான், சுவாமி சித்ரூபானந்தா திரு. டொமினிக் ஜீவா, நந்தி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, யாழ்பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம், யாழ் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜா, திருமதி அம்மன்கிளி முருகதாஸ், டாக்டர் க. லலிதகுமார், என் என்.எஸ் திருச்செல்வம் ஆகியோர் இந்த வெளியீட்டு அரங்கில் உரையாற்றுவார்கள்.

ஓவியர் ஆ. இராசையா, ஓவியர் ரமணி ஆகியோருக்குப் பாராட்டுரையும் பொன்னுடை அணிதலும் இந்த இந்த அரங்கில இடம்பெறும்.

பருத்தித்துறை யதார்த்தா கலை இலக்கிய வட்டம் இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியிருக்கிறது. (க-118)

## யோகர் சுவாமி தவநிலையம்

யாழ்ப்பாணம் ஜன 13

கிரிமலை யோக சுவாமி மகளிர் தவநிலையத்தின் 3 ஆம் ஆண்டுத் தொடக்க விழா 14 ஆம் திகதி காலை வித்துவான் சைவப் புலவர் திரு வ. செல்லையா தலைமையில் நடைபெறும். [க]


## POST OF CLERK

Fortuna requires the services of a Clerk with a knowledge of English Typewriting. Please apply in writing with full details including the expected salary. Canvassing in any form will be a disqualification.

Apply on or before 16 - 1 - 89 to:

**FORTUNA ENTERPRISES**
3 rd Mile Post Lane,
K. K. S Road
Kokuvil. (C/1310)

## WANTED

A Couple with knowledge of Store-keeping & House keeping for a Tourist Class Hotel on Main Street, Jaffna. A retired couple, active & energetic, living in close proximity to the Hotel will be preferred. Salary Rs. 1000/- (One Thousand) with other benefits not exceeding Rs 500/- (Five Hundred). Apply Palm Court - Main Street, Jaffna.
(8692)



## ✱ எமது புதிய வெளியீடுகள்

(1) அர்ஜுன் — ஜீவிதா "வெற்றிச் செல்வன்"
(2) கபில்தேவ் — அபிலாசா "இளமைத் துடிப்புகள்"
(3) PROTECTOR - A Part II
(4) JUNGLE RATS - War-Film
(5) WAR WITHOUT END - (War)
(6) PLATOON LEADEK (War)
(7) BLOOD STONE
(8) BAT - 21 (War)
(9) DAYAWAN - (நாயகன் - ஹிந்தி)
(10) JANAM JANAM (ஹிந்தி)
(11) GANGA TERE DESH MEIN (ஹிந்தி)
(12) MERA FARZ (இலட்சியப் போராட்டம் - ஹிந்தி)

அனைத்தும் ஒரிஜினல் பிரதிகள்

**குணம்** வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/1128)



## அல்டி

சகல விதமான
✱ கைக்கடிகாரங்கள்
✱ சுவர்மணிக்கூடுகள்
பெற்றுக் கொள்ள யாழ் நகரில் பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

அல்டி

We undertake all kinds of Watches for Repairs

**ALDI**
269/1, Power House Road,
JAFFNA.
Prop:- S. Shanmugathasan
(C-1279)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# மகாபொல கொடுப்பனவு - 1988

மேற்படி கொடுப்பனவுக்காக செய்யப்பட்ட ஒழுங்குகள் இத்தால் அறியத் தரப்படுகிறது:

I கலைப் பீடம்: 10 ஆவது (ஒக்டோபர்) 1 ஆவது (நவம்பர்) 2 ஆவது (டிசம்பர்) தவணைப்பணம்.
(அதிகரிக்கப்பட்ட தொகை ஒவ்வொரு தவணைப் பணத்திற்கும் 150/- உட்பட)

| | கொடுப்பனவு திகதியும் - நேரமும் |
|---|---|
| I கலைப்பிரிவு: | |
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 09 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை<br>16 - 01 - 1989 காலை 9.00 முதல் 12.00 மணி வரை |
| II வியாபார நிர்வாகப் பிரிவு: | |
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 10 - 01 - 1989 காலை 9.00 முதல் 18.00 மணி வரை<br>16 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை |
| II வர்த்தகப் பிரிவு: | |
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 10 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை<br>17 - 01 - 1989 காலை 9.00 முதல் 12.00 மணி வரை |

II விஞ்ஞான பீடம்: 10 ஆவது (ஒக்டோபர்) 1 ஆவது (நவம்பர்) 2 ஆவது (டிசம்பர்) தவணைப்பணம்.
(அதிகரிக்கப்பட்ட தொகை ஒவ்வொரு தவணைப் பணத்திற்கும் 150/- உட்பட)

| | |
|---|---|
| பௌதிக, உயிரியல் விஞ்ஞான பிரிவு: | |
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 11 - 01 - 1989 மு.ப 9.00 முதல் 12.00 மணி வரை<br>17 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை |

III மருத்துவ பீடம்: 10 ஆவது (ஒக்டோபர்) 1 ஆவது (நவம்பர்) 2 ஆவது (டிசம்பர்) தவணைப்பணம்.
(அதிகரிக்கப்பட்ட தொகை ஒவ்வொரு தவணைப் பணத்திற்கும் 150/- உட்பட)

| | |
|---|---|
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 11 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை<br>18 - 01 - 1989 காலை 9.00 முதல் 12.00 மணி வரை |

iv கலைப்பீடம்: 05 ஆவது (செப்டம்பர்) 06 ஆவது (ஒக்டோபர்) 07 ஆவது (நவம்பர்) 08 ஆவது (டிசம்பர்) தவணைப்பணம்.
(அதிகரிக்கப்பட்ட தொகை ஒவ்வொரு தவணைப்பணத்திற்கும் 150/ உட்பட

| | |
|---|---|
| 1ஆம் வருட கலைப் பிரிவு, வர்த்தக பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு | 12 - 01 - 1989 காலை 9.00 முதல் 12.00 மணி வரை<br>18 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை |

v விஞ்ஞான பீடம்: 05 ஆவது (செப்டம்பர்) 06 ஆவது (ஒக்டோபர்) 07 ஆவது (நவம்பர்) 08 ஆவது (டிசம்பர் தவணைப்பணம்.
(அதிகரிக்கப்பட்ட தொகை ஒவ்வொரு தவணைப்பணத்திற்கும் 150/- உட்பட)

| | |
|---|---|
| 1ஆம் வருட பௌதிக, உயிரியல் விஞ்ஞான பகுதி | 12 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை<br>19 - 01 - 1989 காலை 9.00 முதல் 12.00 மணி வரை |

vi மருத்துவ பீடம்: 05 ஆவது (டிசம்பர்) தவணைப்பணம்.
(அதிகரிக்கப்பட்ட தொகை 150/- உட்பட)

| | |
|---|---|
| 1ஆம் வருட மாணவர்கள் | 13 - 01 - 1989 காலை 9.00 முதல் 12.00 மணி வரை<br>19 - 01 - 1989 பி.ப 1.30 முதல் 3.00 மணி வரை |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

01. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
02. 01/- பெறுமதியான முத்திரை
03. மாணவர் பதிவுப் புத்தகம் / புதுப்பிக்கப்பட்டது.

- பதிவாளர்

[C-1127]


WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS
IN SRI LANKA
REMEMBER

**SHABRA**

We have proved **S**tability
We have shown **H**onesty
We are very much **A**dvanced
We have the most **B**acking
We are so **R**eliable
Thats why we are on the move **A**head

For more details please contact:

**Shabra Unico Finance Limited**
207, Power House Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துச் செய்த சவுதி அரேபியாவில் பணிபுரியும் 40 வயதுடைய மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. (விவாகரத்துச் செய்தவராயினும் கவனிக்கப்படும்.) புகைப்படம் அடங்கிய முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். (கொழும்பில் தொடர்பு கொள்ளக்கூடிய முகவரி இருப்பின் குறிப்பிடவும்.

தொடர்பு: 429, C/o. உதயன்
(C/1283) யாழ்ப்பாணம்.



# WALK IN INTERVIEW
# 5 STAR HOTEL

**Saudi Arabia**

**Immediate Vacancies age - 21-40 years. Interview will held in Colombo on 17. 1. 89 onwards.**

English Speaking
Hotel Waiters - Males only

## VACANCIES IN SAUDI ARABIA

| | | SALARY |
|---|---|---|
| 1. | Pipe Fitter Foreman | SR 800 |
| 2. | Sewage Water Treatment, Plantforeman | SR 800 |
| 3. | Pipe Line Supervisor | SR 1200 |
| 4. | Sewage Water Treatment, Plant Operater | SR 650 |
| 5. | Saftey Engineer | SR 1300 |
| 6. | Pipe Fitter | SR 650 |
| 7. | Heavy Duty Equipment Operator | SR 700 |
| 8. | Steel Fixer | SR 700 |
| 9. | Sheet Fixer | SR 700 |
| 10. | Mason | SR 650 |
| 11. | Carpenter | SR 650 |
| 12. | 300 Cleaners | SR 400 |
| 13. | Welders | SR 650 |

சவூதிக்கு நேர்முகப் பரீட்சை:-
**13, 14, 15, 16.1.89 வரை நடைபெறும்.**

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவேண்டும். எனவே எம்முடன் கடவுச்சீட்டு. 3 போட்டோக்கள், தொழில் அனுபவச் சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
31. 1. 89 இவர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் நடைபெறும்:

## குவைற் நாட்டில் வேலை வாய்ப்பு

**500 தொழிலாளர்கள்**
**சம்பளம் 35 KD**
உணவு இல்லை.
தங்குமிடம் அளிக்கப்படும்.
வயது - 18 — 48 வரை

# T. V. TRAVELS
BROWN ROAD,
KOKUVIL.
(Railway Station Front)
(C/1293)


## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:-
12. 04. 1943

மறைவு:-
05: 01. 1987

செல்வி
### அன்னலட்சுமி சின்னத்துரை

எம்குடும்பத்திலையவளே! எவற்கும் இனியவளே!
எமை நீர் பிரிந்து ஈராண்டுமானதுவோ?
அன்னமே: அன்புருவே! அழுகின்றோம் என்புருகி,
அன்னமிட்டீர் ஆதரித்தீர் அனைவரையும்
அனைவரையும் அலறவிட்டு அமரனடி சேர்ந்தீரே!
-ஆத்மசாந்திக்காய் அனைவரும் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்:
தாய், சகோதர சகோதரிகள்,
பிள்ளைகள், மைத்துனர்,
உற்றார், உறவினர்.

120/3 புகையிரத நிலயமுன்
புங்கன்குளம்,
யாழ்ப்பாணம்.
(8679)


## WANTED

A lady tutor for Short hand & Typing Part Time / Full Time for a leading Institute in JAFFNA.

(C/1299) 430, C/o UTHAYAN


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### பண்டிதவரதன் யுகவரதன்

அன்னையின் மடியில்: 02-01-1967 ஆண்டவன் அடியில் 25-12-1987

எங்கள் குலக்கொழுந்தான அமரர் யுகவரதனின் ஓராண்டு நினைவையொட்டிய ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 13.1 1989 வெள்ளிக்கிழமை பகல் 12 00 மணிக்கு எச்சாட்டி வைரவர் ஆலயத்தில் அபிடேக ஆராதனைகளுடனும், அன்னதானத்துடனும் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் இப்பிரார்த்தனை வைபவங்களில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அண்ணமலை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்,
தந்தை, சகோதரி, மைத்துனர், மருமகன்
(8836)

## நினைவஞ்சலி



அமரர்
### நாகமுத்து கருணானந்தசிவம்

மடியிலே மலராய் 22-5-1944 மண்ணிலே உரமாய் 04-12-1988

கால் பதித்த மண்ணெடுத்து
கண்களிலே ஒற்றுகிறோம்
கை பதித்த ஏடனைத்தும்
கருவறையில் வைத்திடுவோம்
வாய் மொழிந்த வார்த்தைகளை
வேதமெனப் போற்றிடுவோம்
நோய் அணையாப் பெருவாழ்வை
நேரணைத்த நாயகனே...

காற்றினிலே உன்றன்
கருணையினை நாம் உணர்வோம்
கனவினிலே இனிய முகம்
நித நிதமும் காணுகிறோம்
தோற்றனையா வாழ்வை?
தோற்றது பொய் மரணமடா
ஆற்றிடுவோம்.: உன்றன்
அரிய பணி நாம் தொடர்வோம்...

குடும்பத்தினர், நண்பர்கள்
(8850)

# மன்னாருக்கு எரிபொருள் இனி கிளிநொச்சியிலிருந்து

யாழ்ப்பாணம், ஜன 18
மன்னார் மாவட்டத்திற்கான எரிபொருள் விநியோகம் இனிமேல் கிளிநொச்சி எரிபொருள் நிரப்பு நிலயத்திலிருந்தே மேற்கொள்ளப்படும்,

மன்னார் செயலக அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் மன்னார் மாவட்டத்திற்கான எரிபொருள் விநியோகம் அனுராதபுரம் எரிபொருள் நிரப்பு நிலயத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுவந்தது. இதனால் ஏற்படும் போக்குவரத்துத் தடங்கல்களை நீக்கும் நோக்குடனேயே இந்த மாற்று ஏற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து மன்னாருக்கு பவுஸர்கள் மூலம் எரிபொருள்கள் எடுத்துச்செல்லப்படும்.
(ஒ-5)

## பதவி உயர்வு

மருதநிதுறை ஜன. 13
பருத்தித்துறை பிரதேசசபை புலோலி உப அலுவலக பொதுசன நூலகப் பொறுப்பாளர் திரு. ஏ.என்.எஸ். திருச்செல்வம் உள்ளூராட்சித் திணைக்களத்தால் நூலகர் தரம் மூன்றுக்குப் பதவி உயர்த்தப்பட்டார்.

திரு. திருச்செல்வம் சிறந்த சமூகசேவையாளரும் பத்திரிகையாளரும், எழுத்தாளருமாவார். (இ)

## கமநலசேவைத் திணைக்களத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் (அமைய) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சேவை செய்வதற்காக தொழில் நுட்ப உத்தியோகத்தர்களை (அமைய) சேர்த்துக்கொள்வதற்கு தகுதி பெற்ற சிறிலங்கா பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 21-01-1989 திகதியோ அதற்கு முன்னரோ குறிப்பிட்ட மாவட்டத்தின் கமநல சேவை உதவி ஆணையாளருக்கு கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும். இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் யாழ். மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. தேவைப்படும் தகைமைகள்:

(1) ஒரு வருட செய்கைமுறைப் பயிற்சியுடன் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (சிவில்) பரீட்சையில் சித்தி.

(2) வயது—18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தலும் வேண்டும்.

04. சேவையின் பொருட்டு நாள் ஒன்றுக்கு ரூபா. 54/- கொடுப்பனவு செய்யப்படுவதோடு அதற்கு மேலதிகமாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 387 இன்படி வாழ்க்கைச் செலவுப்படி கொடுக்கப்படும்.

05. சேவையில் காட்டும் திறமையின்படி நிரந்தர சேவையில் சேர்ப்பது பற்றி கவனத்தில் எடுக்கப்படும்.

எச். எம். சி. கபிலரத்ன
ஆணையாளர்,
கமநலச் சேவைகள் திணைக்களம்,
கொழும்பு.
(C/1301)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை
[ஓய்வூதியர்]

தோற்றம்: 1930-08-26 மறைவு: 1988-11-15

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், அன்பு மொழிபேசி எங்களை வழி நடத்திய எங்கள் குலவிளக்கே புன்சிரிப்புத் தவழும் உங்கள் முகத்தை இனி எப்போ கண்போம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவால் உயிர் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
[8569]


## SPACE AVAILABLE

NEW BUILDING
WITH ALL FASCILITIES
1st FLOOR
2nd FLOOR

Each floor approximately 700 sq. Feet, situated at Hospital Road,
(Closer to Bus stand)

Apply No: 25,
C/o, Uthayan, Jaffna
(8681)



# T. V. ரவல்ஸ் & ரூரிஸ்ட்

பெருமையுடன் வழங்கும்
## உடனடி வேலைவாய்ப்புகள்
### சவூதி அரேபியா
SAUDI ARABIA ALRAJHI CO:

| | | | |
|---|---|---|---|
| (1) | ஸ்ரீல் பிற்றர் | சம்பளம் | 650 SR |
| (2) | கூரை ஓடு பிற்றர் | .. | 650 SR |
| (3) | மேசன் | .. | 650 SR |
| (4) | தச்சு வேலையாட்கள் | .. | 650 SR |
| (5) | பிளம்பர்ஸ் | .. | 650 SR |
| (6) | டீசல் மெக்கானிக் | .. | 650 SR |
| (7) | பெற்றல் மெக்கானிக் | .. | 650 SR |
| (8) | சாரதிகள் H. V. | .. | 650 SR |
| (9) | ஓட்டோ எலக்ரீஷன் | .. | 650 SR |
| (10) | எலக்ரீஷன் | .. | 650 SR |
| (11) | மெக்கானிக் | .. | 650 SR |
| (12) | வெல்டர்ஸ் | .. | 650 SR |
| (13) | Civil Supervisor | .. | 800 SR |
| (14) | கிளீனர்ஸ் 300பேர் | .. | 400 SR |

தங்குமிடம் அளிக்கப்படும்.
**Food allowance will be paid**
வயதெல்லை (Age Limits) 21 — 48

## குவைத்நாட்டில் வேலைவாய்ப்பு

300 கிளீனர்ஸ் சம்பளம் 35 KD
வயதெல்லை 18 — 48 வரை
No Food தங்குமிடம் அளிக்கப்படும்

முக்கிய அறிப்பு!
எமது காரியாலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 8.00 மணிமுதல் 5.00 மணி வரை
ஞாயிறு காலை 8 00 மணிமுதல் 2 00மணிவரை

# T.V. Travels & Tourist
**BROWN ROAD,**
**(Railway Station Front)**
KOKUVIL:
(C/1256)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
### செல்வச்சந்திரன் கஜேந்திரன்

மண்ணகம்:- 24 —04— 1967 விண்ணகம்:- 14 —12— 1988

அன்புச் செல்வமே!
பாசத்தால் எமைவென்று
பண்பால் நீயுயர்ந்து;
காலத்தால் எம்மைக்-
கண்ணீரில் தவிக்கவிட்டு!
தண்ணீரில் துயில் கொண்டாய்!
கஜேந்திரா உன்தன்
நேய முகம் நாம்
காண்பதெப்போ.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு, பலவிதத்திலும் உதவிகள் செய்த அனைவருக்கும் அன்புடன் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
உடன்பிறப்புக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.
(9152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

**பொருள்:**

தம்மிடத்தில் உள்ள குற்றத்தை அறிந்து நீங்காத போது உடம்பில் மறைப்பதற்கு உரிய பகுதியை மட்டும் ஆடையால் மறைத்தல் புல்லறிவாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - ஐக்கியம்

இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

13. 1. 1989 த. பெ. இல 23


## அவசர காலம் நீங்கியது; விரும்பும் அமைதி வருமா?

இலங்கை முழுவதிலும் நடைமுறையில் இருந்த அவசர காலச் சட்டம் புதன்கிழமை நள்ளிரவுடன் நீக்கப்பட்டுவிட்டது.

1983 ஜூலை வன்செயல்களைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள், ஒரே தொடர்ச்சியாக கடந்த புதன்கிழமை வரை அமுலில் இருந்தன. மாதாந்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணை மூலம் அவை இடைவெளி இன்றி உபயோகிக்கப்பட்டு வந்தன.

நாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து குழப்பம், கலவரம், அமைதி இன்மை என்பன ஏற்படும் போதும்; சாதாரண குற்றவியல் சட்டங்களினால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது என்று காணும் போதுமே அவசர காலச் சட்டம் கொண்டு வரப்படுவது உண்டு.

அவ்வாறு அமுலுக்குக் கொண்டு வரப்படும் போது, நிலைமையைக் கட்டுப்படுத்த வென்று, கையாளவென்று சில விசேட அதிகாரங்களை அரசாங்கம் தனதாக்கிக் கொள்ளலாம். படைகள், திணைக்களங்கள் மூலம் அவ்வாறான விசேட அதிகாரங்களை அரசு செயற்படுத்தவும் முடியும்

சுருங்கச் சொன்னால் போர் நிலைமை. இயற்கை அனர்த்தங்கள் ஆகிய சூழ்நிலைகளிலேயே, அவசர காலச் சட்டவிதிகளும், அவற்றின் கீழான விசேட அதிகாரங்களும் பயன்படுத்தப்படுவது உண்டு.

ஆனால் இலங்கையில், அவசரகாலச் சட்டமும் விசேட அதிகாரங்களும் அவற்றுக்கு உரிய நோக்கங்களுக்காக மட்டுமன்றி வேறு அரசியல் நோக்கங்களுக்காகவும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன.

அரசியல் பழிவாங்கல், அதிகாரத்தை நிலைநிறுத்தல், பேரினவாதத்தை ஊக்குவித்தல், அரச பயங்கரவாதத்தை வளர்த்தல், மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகள், அடிப்படை உரிமை மீறல் செயற்பாடுகள் என்பனவற்றுக்காகவே அவசர காலச் சட்டம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

ஒருவரைக் காரணம் காட்டாமல் கைது செய்தல், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல தடுத்து வைத்தல், படையினால் கொலை செய்யப்பட்டவரது மரணம் குறித்து விசாரணை நடத்தாமல சடலத்தை அழித்தல் ஆகிய கொடுமையான விசேட அதிகாரங்கள் அவசரகாலச் சட்டத்தின் உற்பத்திகளே!

அவை போக, விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்தல், சிறைக்கூடங்களில் அடிப்படை வசதிகள் தானும் வழங்காதிருத்தல் போன்ற மறைமுகக் கொடுமைகளும் அவசரகாலச் சட்டத்தினதும், அதன் கீழான அதிகாரங்களினதும் பெறுபேறுகளே.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர், தமிழ் இளைஞர்களும், அப்பாவித் தமிழர்களும் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே முன் சொன்ன கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டார்கள்.

இந்தக் கொடுமைகள் பலவற்றுக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நிரந்தர இடமளிக்கப்பட்டிருப்பது அநியாயத்துக்குத் துணைபோகும் செயல் என்றே சொல்ல வேண்டும்.

அதற்கும் மேலாக குற்றங்களைச் செய்யும் படை அதிகாரிகளை மன்னிக்கும் குற்றத் தவிர்ப்புச் சட்டமும் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இதற்கு மேல் அவசர காலச் சட்டத்தை நீக்குவதானால் பெரும் பெறுபேறுகள் கிடைத்து விடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் காலாட்படை அதிகாரிகள் தமது எண்ணப்படி சில விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தலாம். நேற்று முதல் சட்டம் ரத்தாகி விட்டதால் குறிப்பிட்ட விசேட அதிகாரங்கள் இல்லாமல் போகும் என்பதிலேயே சிறு நன்மை உண்டாகும்

அமைதியைக் கொண்டு வருவதற்காகத் தான் அவசர காலச் சட்டம் நீடிக்கப்படுவதாக இது வரை அரச சார்பில் கூறப்பட்டது.

இப்போது அது நீக்கப்பட்ட பின்னராவது தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்கள மக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கும் அமைதி பிறக்குமா என்பதற்குக் காலம் தான் பதில் சொல்லும்.

---

லிபிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதற்கு

# அமெரிக்காவைக் கண்டிக்கும் பிரேரணை; மூன்று நாடுகள் ஒரே சமயத்தில் 'வீட்டோ'!

### ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில்

வாஷிங்டன், ஜன. 12

மத்திய தரைக்கடல் பகுதியில் லிபிய விமானங்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்திய சம்பவத்தைக் கண்டிக்கும் பிரேரணை, ஐ. நா பாதுகாப்புச் சபையில் நிராகரிக்கப்பட்டது.

சபையின் 15 உறுப்பினர்களில் பெரும்பாலோர் பிரேரணைக்கு ஆதரவளித்தனர்.

ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய 3 நாடுகளும் ஒரே சமயத்தில் வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து பிரேரணையை நிறைவேறுமற் செய்தன.

லிபிய அரசின் வேண்டுகோளின் மீது இப்பிரச்சினையை ஐ நா பாதுகாப்புச் சபை விவாதித்தது.

லிபிய விமானங்களில் ஏவுகணைகள் பொருத்தப்பட்டு இருந்தமை புகைப்பட ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கப் பிரதிநிதி கூட்டத்தில் அறிவித்தார்.

கனடாவும் கண்டனப் பிரேரணையை எதிர்த்தது. பிரேஸில் நடுநிலை வகித்தது.

மூன்று நாடுகள் பிரேரணையை ஒரேசமயத்தில் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்தது மூன்று வருடங்களில் இது முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. லிபியத் தலைநகர் திரிப்பொலி மீது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கின.

அப்போது ஐ நா பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா மீது கண்டனப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதுவும் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளினால் வீட்டோ பாவித்து ரத்துச் செய்யப்பட்டது:

இதனிடையில் - மத்திய தரைக்கடலில் அடுத்தவாரம் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் நடத்தவிருந்த யுத்த முஸ்தீபு நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

லிபியப் பிரதிநிதி பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், வீட்டோ அதிகாரத்தை மேற்கு நாடுகள் துஷ்பிரயோகம் செய்வதாகக் கண்டித்தார். (எ)

## பங்களாதேஷில் புரட்சிப்படை; 1988இல் 117 பேர்பலி!

டாக்கா, ஜன. 12

பங்களாதேஷில்மார்க்ஸிஸ புரட்சியை ஏற்படுத்துவதற்காக போராடி வரும் தீவிரவாதிகள் கடந்த ஆண்டில் 117பேரைக் கொன்றனர்.

உயிரிழந்தவர்களில் பலர் கிராமத் தலைமைக்காரர்கள் மற்றும் பணக்கார விவசாயிகள் ஆவர்.

இவர்களை வர்க்க எதிரிகளாக தீவிரவாதிகள் கருதினர்.

பெங்காளி தினசரி இற்றப்பாக் இத்தகவல்களை வெளியிட்டது.

இத் தீவிரவாதிகள் கடந்த ஆண்டில் பொலிஸ் நிலையங்கள் மீது 12க்கும் அதிகமான தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

கிழக்கு வங்காள கம்யூனிஸ்ட் கட்சி. பங்களாதேஷ் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இத்தீவிரவாதிகள் ஆவர். (எ)

## மாஸ்கோவில் ஆப்கன்குழு

மாஸ்கோ, ஜன 12

ஆப்கன் நாடாளுமன்றக்குழு ஒன்று மாஸ்கோவுக்குச் சென்றது.

கிரெம்ளின் அரசியல் குழு உறுப்பினர் அனடோலி லுக்யனோவ் குழுவுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

ஆப்கன்பிரச்சினைக்குத் தீர்வு காண மாஸ்கோ தன்னாலியன்றதைச் செய்யும் என்று அவர் குழுவிடம் தெரிவித்தார். (எ)

## மெக்ஸிகோவில் நெருக்கடி; தொழிற்சங்கத் தலைவர் கைது!

மெக்ஸிகோ, ஜன 12

மெக்ஸிகோவில் தொழிற் சங்க இயக்கத்தை நசுக்கும் முயற்சியில் புதிய ஜனாதிபதி ஈடுபட்டிருக்கிறார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுப் பலம் பொருந்திய எண்ணெய்த்தொழிலாளர்களின் தொழிற்சங்கம் ஒன்றின் தலைவர் காரசியா என்பவரை அரசுப் பாதுகாப்புப் படையின் பலத்த துப்பாக்கிச் சண்டையின் பின்னர் கைது செய்தனர்.

இச்சண்டை ஒருமணித்தியாலம்வரை நீடித்தது அரசு அதிகாரி ஒருவர் யிரிழந்தார்.

அரசின் பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைகளைக் கண்டித்து இத் தொழிற்சங்கம் வேலை நிறுத்தம் நடத்த முயற்சித்தது அதைத் தொடர்ந்தே ஜனாதிபதிஇக்கடும் நடவடிக்கையை எடுத்தார்.

85 தொழிற்சங்கப் பிரமுகர்களும் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து தொழிலாளர் பரவலாக வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

ஜனாதிபதியின் ஜனநாயக விரோத நடவடிக்கை, நாட்டில் அராஜக நிலை ஏற்படவே உதவும் என்றுதொழிற்சங்கப் பிரமுகர்கள் கண்டித்தனர்: (எ)

வெளி உலகில்

## இடிஅமினை ஒப்படைக்கும்படி உகண்டா அரசு கோரிக்கை

நைரோபி, ஜன.12

முன்னாள் சர்வாதிகாரி இடிஅமினை கையளிக்கும்படி உகண்டா அரசு ஸயாரே அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

நைஜீரியாவில் இருந்து உகண்டாவுக்கு இரகசியமாக திரும்புவதற்கு ஸயாரேக்கு விமானத்தில் வந்த சமயம் இடி அமின் கைது செய்யப்பட்டார்.

அவர் பயணஞ் செய்த விமானத்தின் விமானி இடி அமினை அடையாளங் கண்டு பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

அமினும் அவரின் புதல்வர்களும் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர்.

1979 புரட்சியில் இடி அமின் பதவி கவிழ்க்கப்பட்டார்.

இடி அமினை பொறுப்பேற்று உகண்டாவுக்கு கொண்டு வர உகண்டா ராஜாங்க மந்திரி சிஸ்ஸா பெஸிகியி தலைமையில் ஒரு குழு கிஸின்ஷாவுக்குச் சென்றுள்ளது.

## அகிஹிட்டோ ஆட்சியை கவிழ்க்க ஜப்பானிய செம்படை சபதம்

பேருட், ஜன.12

ஜப்பானின் புதிய சக்கரவர்த்தியின் ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாக, செம்படை அறிவித்திருக்கிறது.

ஜப்பானைச் சேர்ந்த கெரில்லா அமைப்பான செம்படை லெபனானின் தலைநகரான பேருட்டைத் தலைமையகமாக வைத்துஇயங்குகின்றது.

செம்படை விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மறைந்தசக்கரவர்த்தி ஒரு யுத்தக் குற்றவாளி.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பானிலும் மற்றும் ஆசிய நாடுகளிலும் சுமார் 4 கோடி 80 லட்சம் மக்கள் உயிரிழக்கக் காரணமாக இருந்தவர் ஹிரோஹிட்டோ. அவரின் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை நாம் மன்னிக்க முடியாது' —

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (எ)



## 40 ஆவது அமெரிக்க ஜனாதிபதியின் பிரியாவிடைச் செய்தி

## றேகன் 'றெஜிமண்ட்' போக புஷ் 'பிரிகேட்' வருகிறது

வாஷிங்டன், ஜன 12

எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகும் திரு. றொனல்ட் றேகன் நேற்று நாட்டு மக்களுக்குப்பிரியா விடை உரை நிகழ்த்தினார்.

டெலிவிஷன், வானொலிமூலம் நிகழ்த்திய பிரியா விடை உரையில் திரு. றேகன் சொன்னதாவது:

சோவியத் யூனியனில் ஜனநாயக சீர்திருத்த நடவடிக்கைகளை திரு. கோர்பச்சேவ் மேற்கொண்டு வருகிறார். இது பாராட்டப்படவேண்டும். தொடர்ந்தும் அவர் தனது முயற்சியில் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக. சோவியத் - அமெரிக்க உறவுகள் தொடர வேண்டும்.

எனது அரசியல் கொள்கைகள் வெற்றி கண்டன. ஆப்கன், மற்றும் வியட்னாமில் இருந்து சோவியத்துருப்புக்களும், அங்கோலாவில் இருந்து கியூபன் துருப்புக்களும் வெளியேறுகின்றன.

ஆனால் எனக்கு ஒரே ஒரு கவலை. அது அமெரிக்காவின் பொருளாதாரச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியவில்லை என்பதே. வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை இருக்கிறது.

உலகில் அமெரிக்காவின் மதிப்பு எனது ஆட்சிக் காலத்தில் உயர்ந்தது. றேகன் 'றெஜிமெண்ட்' (Reagan Regiment) புஷ் 'பிரிகேட்' (Bush Brigade) ஆக மாறவேண்டும் அமெரிக்கா இன்று நல்லவர் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. கவலைப்படவேண்டியதில்லை.

ஆகவே எல்லோருக்கும் 'குட் பை; உங்களைக் கடவுள் ஆசிர்வதிப்பாராக! ஐக்கிய அமெரிக்காவையும் கடவுள் ஆசிர்வதிப்பாராக?

இப்படி அதிபர் றேகன் தனது எட்டு ஆண்டு கால ஆட்சியில் வெள்ளைமாளிகை ஓவல் அலுவலகத்தில் இருந்து நிகழ்த்திய 43 ஆவது இறுதி டெலிவிஷன் உரையில் கூறிப் பிரியாவிடை பெற்றார். (எ)

## ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில்கோர்பச்சேவ்

மாஸ்கோ, ஜன. 12

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின்சார்பில் சோவியத் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்களில் ஒருவராக ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின் பெயர் நேற்று தேர்தல் ஆணையாளரின் முன்னிலையில் பதிவுசெய்யப்பட்டது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 100 பேர் புதிய நாடாளுமன்றத்தில் இடம்பெறுவர்.

அவர்களில் நேற்று திரு. கோர்பச்சேவ் உட்பட பொலிட்பீரோவில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள் ஏகமனதான முறையில் வேட்பாளர்களாகப் பதிவு செய்யப்பட்டனர்

எஞ்சிய வேட்பாளர்களை நியமிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிற்பீரோ மார்ச் 15, 16ஆம் திகதிகளில் கூடும்.

நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் தொகை 255. எஞ்சிய ஆசனங்களுக்காக பல குழுக்களின் சார்பில் கல்விமான்கள் தொழிலாளர்கள் மற்றும்சாதாரணப் பிரசைகள் போட்டியிடுவர்.

இதற்கான பொதுத் தேர்தல் மார்ச் 21இல் நடைபெறும். (எ)

### உச்சி மாநாடு

சீன - சோவியத் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகளைப் பூர்த்தியாக்க சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவார்ட் நாட்சேபீகிங் செல்லவிருக்கிறார்.

---

## வனவாசம் முடிந்து வருகிறோம்

## தி.மு.க தலைவர்கருணாநிதிவர்ணனை

உதய சூரியனை மேகங்கள் மறைக்க முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி பேசினார்.

ஆலந்தூரில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் திரு கருணாநிதி மேலும் சொன்னதாவது;

சூரியனை கல்லால் எறியமுடியாது. அப்படி எறிந்தால் எறிந்தவன் மீதுதான் கல் விழுமே தவிர சூரியனை அது ஒன்றும்செய்யமுடியாது.

12 ஆண்டுகள் வனவாசம் சென்றாலும், ஓர் ஆண்டு அஞ்ஞாத வாசம் செல்ல நேரிட்டாலும் கூட பஞ்சபாண்டவர்கள் மீண்டும் நாடாள வந்ததைப் போல தி. மு. க. மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வந்துள்ளது

உதய சூரியன் சின்னம் அண்ணா தந்தது. வேறு கட்சிகளில் எத்தனையோ சின்னங்கள் உருக்குலைந்து போய் விட்டன. எத்தனை மாறினாலும் சூரியன் மட்டும் மாறுவதில்லை.

மேக மூட்டங்களைப் பற்றி சூரியன் கவலைப்படுவதில்லை.

வானத்தை வில்லாக வளைப்போம், மணலைக் கயிறாகத் திரிப்போம் என்று சொல்லி மக்களை [illegible] இல்லை

இப்படி கருணாநிதி தெரிவித்தார். (எ-4)

## நாளை நமதே வெற்றி நமதே! ஜெயலலிதா முழக்கம்

சென்னை, ஜன 12

சேவல் சின்னம்எதைக் குறிக்கிறது?

ஜெயலலிதா தனது சுறுவளிப் பிரசாரத்தின் போது இது குறித்து விளக்கம் தெரிவித்து வருகிறார்;

சென்னையில் தியாகராயநகர், அண்ணாநகர், சேப்பாக்கம் ஆகிய தொகுதிகளில் நடந்த கூட்டங்களில் பேசும் போது ஜெயலலிதா சொன்னதாவது;

சேவல், எமது தேர்தல் சின்னம். கம்பீரமான சின்னம் அது. வெற்றியின் சின்னமும் அதுவே: ஏழைகள், பாட்டாளிகளின் சின்னமும் சேவல்.

என்னை அரசியலுக்கு கொண்டு வந்தவர் எம். ஜி ஆர். புரட்சித் தலைவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர நாம் பாடுபடுகிறோம். தமிழகத்தில் ஊழல் அற்ற ஆட்சியை அமைப்போம்.

[illegible] நமதே, வெற்றி நமதே. [illegible] பேசினார். (எ-4)

தமிழ்நாடு தேர்தல்களம்

## காங்கிரஸ் மேடையில் ஸ்ரீதேவி

சென்னை, ஜன 12

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸை ஆதரித்து நடிகை ஸ்ரீதேவி பிரசாரம் செய்யவிருக்கிறார்.

அவருடன் திவ்யா, மாயா, ஜெயப்பிரதா, ராஜேஷ்கன்னா, சுனில் தத் ஆகியோரும் காங்கிரஸ் மேடைகளில் பிரசாரம் செய்ய வருகின்றனர்.

தென்ஆற்காடு மாவட்டத்தில் இரண்டுவாரம் தங்கி கிராமம், கிராமமாக பிரசார வேலைகள் மேற்கொண்டு வருவதாக காங்கிரஸ் எம்.பி வெங்கடேசன் சொன்னார். (எ)

## ஜானகி ஆட்சிவருக! சிவாஜி வேண்டுதல்

சென்னை, ஜன 12

தமிழ் மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயரிட மறுத்த தியாகி சங்கரலிங்கனாரை சாகடித்த காங்கிரஸ் ஆட்சி மீண்டும் வரவேண்டுமா?

அ. தி. மு. க. ஜானகி அணித் தலைவி ஜானகி அம்மாள் மேற்கண்டவாறு கேட்டார்.

சென்னையில் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

எம். ஜி. ஆர். ஆட்சியை வடபுலத்தாரின் சூழ்ச்சி வென்றது. நம்ப வைத்து கழுத்தறுத்தவர்களின் கை ஓங்கியது.

எம். ஜி. ஆர். ஆட்சியை ஏற்றிப்போற்றிப் பேசியவர்கள் இன்று தூற்றிப் பேசுகின்றனர். புரட்சித் தலைவரின் மக்கள் சக்தியைச் சிதறடித்து விடலாம் என்ற கற்பனையில் காங்கிரஸார் செயல்பட்டு வருகிறார்கள். இது எடுபடாது—

இப்படி ஜானகிசொன்னார்.

ஜானகி அணிக்கு ஆதரவாக நடந்த பிரசாரக் கூட்டத்தில் தமிழர் முன்னேற்ற முன்னணித் தலைவர் சிவாஜி கணேசன் பேசினார்.

சிவாஜி சொன்னதாவது;

உங்களுக்கு இரட்டை புறா புதிதல்ல; இரட்டை இலை சின்னம் போன்றது தான். இரட்டை இலைச்சின்னம் கருகிவிடவில்லை.

ஜானகி அம்மாளை அரியாசனம் ஏற்ற நான் வந்துள்ளேன். உண்மையான எம். ஜி. ஆர். ஆட்சி வந்தால் அது காமராஜர் ஆட்சியாகவே அமையும்.

இப்படி சிவாஜி சொன்னார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ANNA INDUSTRY
INUVIL
PHONE 23412



# உதயன்

13·01·1989 வெள்ளிக்கிழமை



அண்ணா தயாரிப்புக்களின் வெற்று
★ பைக்கட்டுக்குரிய பரிசு விபரம்

100 gm பற்பொடி பைக்கற் 10 } 1 கோப்பி
அல்லது } அல்லது
25 gm பற்பொடி பைக்கற் '50 1 ஸ்ரிக்கர்
25 ஊதுபத்தி பைக்கற்றுகளுக்கு 1 பைக்கற் ஊதுபத்தி
50 அண்ணா மோல்ட் லேபல் } 1 தொப்பி
அல்லது } அல்லது
50 அண்ணா டொபி லேபல் } ஸ்ரிக்கர்
வெகுமதிகளை நேரில் பெற்றுக்கொள்ள
வேண்டிய இடம்:
அண்ணா தொழிலகம், இணுவில்.


## நல்லூர் தெற்கு - இருபாலை பகுதிகளுக்கு ஞாயிறு நிவாரணம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன 13
நல்லூர் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 1303 குடும்பங்களுக்கும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இருபாலை கிராம சேவகர் பகுதிக்கு உட்பட்ட 214 குடும்பங்களுக்கும் எதிர் வரும் 15-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆயிரம் ரூபா மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி பிரதான கிளையில் பிரஸ்தாப தினம் காலை எட்டு மணி தொடக்கம் மாலை மூன்று மணிவரை இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். (இ-ஐ)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜன 13
கிரான் கிராமச்சேவையாளர் திரு.வி நாகநாதன் இனந்தெரியாத நபர்களால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஓ-21)

## 6, 715 குடும்பங்களுக்கு
# வார இறுதியில் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன13
இவ்வார இறுதியில் மீளக் குடியமர்தல் நிவாரணம் பெறவிருக்கும் 6 ஆயிரத்து 715 குடும்பங்களின் பெயர்ப்பட்டியல்கள் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன:

காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளையில் நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

★ தூர்க்காபுரம்—298
★ அளவெட்டி தெற்கு —236
★ அளவெட்டி வடக்கு —98
★ வயாவிளான்—312

5 ஆம் திகதி இதே வங்கியில் நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

★ கட்டுவன் — 196
★ மயிலிட்டித்துறை —217
★ பலாலி மேற்கு—406
★ பலாலி கிழக்கு—206

15ஆம் திகதி மானிப்பாய் இலங்கை வங்கியில் நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:—

★ சுதுமலை — 752

15ஆம்திகதி ஸ்ரான்லி வீதி இலங்கைவங்கியில் நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு'—

★ கோண்டாவில் கிழக்கு — 431
★ கொக்குவில் கிழக்கு — 110
★ நல்லூர் வடக்கு —257
★ திருநெல்வேலி மேற்கு — 85
★ கந்தர்மடம்—125
★ திருநெல்வேலி கிழக்கு — 242

பருத்தித்துறை இலங்கை வங்கியில் 15 ஆம் திகதி நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:—

★ பொலிகண்டி கிழக்கு — 321
★ பொலிகண்டி மேற்கு — 454
★ துன்னாலை வடக்கு —154
★ கற்கோவளம்—72

பருத்தித்துறை இலங்கை வங்கியில் 21 ஆம் திகதி நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கைவருமாறு:—

★ கெருடாவில் வடக்கு — 519
★ கெருடாவில் தெற்கு — 451
★ மருதங்கேணி—94
★ உடுத்துறை — 56
★ முள்ளியான் —36

ஏனையோரின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும். (ஒ-10)

## ஆஸ்பத்திரி வீதி கிளையில்

உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் மொத்தம் ஆயிரத்து 760 குடும்பங்களுக்கு தலா நாலாயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்தக் கொடுப்பனவு நாளை 14ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி பிரதான கிளையில் காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை வழங்கப்படும்.

மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

நிவாரணம் பெறவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும் குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

★ ஈச்சமோட்டை 241
★ சோனகத்தெரு-10
★ யாழ்நகர்-21
★ நாவாந்துறை-156
★ கொழும்புத்துறை-335
★ குருநகர் மேற்கு-997 (ஒ-ஐ)

## பேச்சுக்கள் தாமதம்

ஏதென்ஸ், ஜன.12
கிழக்கு - மேற்கு நாடுகளின் ஆயுதக் குறைப்புப்பற்றிய பேச்சுக்கள் தாமதமாக ஆரம்பிக்கப்படுமென்று நேட்டோ ஸ்தாபனம் அறிவித்தது.

கிரீஸுக்கும் துருக்கிக்கும் இடையேயான பிரதேசத்தகராறு காரணமாகவே இத்தாமதம்ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## பிரேரணை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஜெருநாடு ஊடாகவே பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐ நா பாதுகாப்புச் சபையிடம் சமர்ப்பித்து வந்தது.

ஐ நா பாதுகாப்புச் சபையில் உரிமை வழங்கும் விஷயம் விவாதத்திற்குவநதபோது அமெரிக்கா மட்டுமே எதிர்த்தது. (ஒ-எ)

## முன்னாள் எம்.பி,,

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் நீண்டகால உறுப்பினராவார்.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மாகாணசபையின் தலைவராக இருந்து பெரும் அரசியல் சமூகப் பணிகளை இவர் ஆற்றினர்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் (ஒ)

## பஸ் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம் ஜன.13
பருத்தித் துறையில் இருந்து முல்லைத்தீவுக்கு நடத்தப்பட்டுவந்த 89 ஆம்இலக்கபஸ்சேவை தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது.

இச்சேவை நிறுத்தப்பட்டிருப்பதால் முல்லைத்தீவில் கடமையாற்றும் வடமராட்சி ஊழியர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதாகப் புகார் கூறப்படுகிறது. (ஒ-10)

## சிலிண்டர் வெடித்ததில் ஊழியர் பலி!

மட்டக்களப்பு ஜன 13
வாழைச்சேனை காகித தொழிற்சாலையில் சிலிண்டர் வெடித்து ஊழியர் ஒருவர் அவ்விடத்திலேயே பலியானார். 4 பேர் காயமுற்றனர்.

இறந்தவர் ஆர். குணசேகரம் [வயது 42] ஆவார். (ஓ-21)

## வடக்கு, கிழக்கில்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)
பிராந்தியத் தலைமை அலுவலகங்கள் இலகுகடன் திட்டத்தை அமுல் செய்வதற்காக கடன்வழங்கும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யஉள்ளது.

வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து தகுதியும் திறமையும் உள்ளவர்களே கடன் வழங்கும் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுவர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் இலங்கை வங்கி, ஆரம்பத்தில் இரண்டு லட்சம் ரூபாவை மொத்தமாக வழங்கும். அந்தத் தொகைக்குப்பெறுமானமான சொத்தை அவர் அடகாக வைக்கவேண்டும்.

குறிப்பிட்ட தொகைக்கு அவர்களிடமிருந்து இலங்கைவங்கி வருடாந்தம் 18சதவீத வட்டியை அறவிடும்,

சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் இந்தப் பணத்தைத் தேவையானவர்களுக்குஇலகு அடிப்படையில் கடனாக வழங்கமுடியும்.

அவ்விதம் வழங்கப்படும் கடனுக்குப் பொதுமக்களிடமிருந்து வருடாந்தம் 30 சதவீத வட்டியை அறவிடுவதற்குப் பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்படும். (அ-ஐ)

## பஞ்சாபில் 13 பேர் பலி

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் 13 பேரை சீக்கியத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மரணஅறிவித்தல்கள்

### கரம்பைக்குளம் கந்தையா

சரம்பைக்குளம் கந்தையா 11-01-89இல் நெடுந்தீவில் காலமானார். இவர் நெடுந்தீவில் பிறந்தவரும், கற்சிலைமடு வாசியும், யோகம்மாவின் அன்புக் கணவரும், முத்துக்குமாரு (நெடுங்கேணி M P. C. S ), கணேசலிங்கம் (கந்தபுரம்), கனகேஸ்வரி (இந்தியா), அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), சிவராசா (கற்சிலைமடு) ஆகியோரின் தந்தையும், மகேஸ்வரி (நெடுங்கேணி M P. C. S.), அன்னலட்சுமி, நவரத்தினம் (இந்தியா) ஆகியோரின் மாமனுருமாவார். தகனக் கிரியைகள் 11-01-89 மாலை 6 மணிக்கு நடைபெற்றது. உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்: சின்ராஸ், நெடுந்தீவு மேற்கு:
(9154)

### கிறிஸ்ரோப்பர் சுவக்கீனு (நல்லம்மா

நெடுந்தீவைச் சேர்ந்த கிறிஸ்ரோப்பர் சுவக்கீனு [நல்லம்மா] 12-01-89 இல் காலமானார். இவர் காலம் சென்ற மாட்டீன் கிறிஸ்ரோப்பரின் மனைவியும், கனகம்மா, அந்தோனிப்பிள்ளை; மாசிலாமணி ஆகியோரின் சகோதரியும், குணரெட்ணம், அழகரெட்ணம், தர்மரெட்ணம், பாலசிங்கம் ஆகியோரின் தாயாருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 25, சென். பற்றிக்ஸ் வீதியில் நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 13-01-89 மாலை 5 மணிக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அ. தர்மரெட்ணம்
344/7,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [8955]

### திரு. எம். ஸி. சுப்பிரமணியம்

திரு. எம். ஸி. சுப்பிரமணியம் அவர்கள் 12-01-1989 இல் காலமாகிவிட்டார்: இவர் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், இலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி விசாலாட்சி ஐயம்பிள்ளை, திருமதி பாக்கியம் செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரபோஸ் (ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம்), திருமதி நிர்மலாதேவி கந்தையா (கனடா), திரு. சந்திரதாஸ் (பிரான்ஸ்), கலாநிதி ரவீந்திரதாஸ் (கனடா), கலாதேவி, ஜெயந்தி.இராகுலன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. S. கந்தையா (கனடா), திருமதி C. சாந்தலட்சுமி திரு- T. கதிரேசன் (அரசாங்க பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம்) திரு. V. விஜேகுமார் (யாழ் பல்கலைக்கழகம் போதனு வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரது மாமனுரும். செல்வி K, கவிதா (கனடா), C. பார்த்திபன், C. அபிரூபன் K. அச்சுதன் (கனடா), K. ஜெய்செந்தூர், V. நிரோஷன் ஆகியோரது பாசமுள்ள பாட்டனுரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-01-1989 ஞயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

தகவல் :
S. சந்திரபோஸ்
21/1, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம். (8954)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம்மா மதியாபரணம்

திருமதி செல்லம்மா மதியாபரணம் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மதியாபரணத்தின் (Accountant, Ceylon Trading Company) அன்பு மனைவியும், ஆறுமுகம் தம்பையா (Rtd. Vaccinator) வின் ஒன்றுவிட்ட சகோதரரும், காலம் சென்ற கனகராஜா (Labour Department). மகேஸ்வரி, ஆனந்தராஜா M. L. T. Base Hospital, Pt Pedro), ஸ்ரீ மங்களராஜா (Bangalore) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிதம்பர நடராஜா (T R R O, முன்னுள் பொலிஸ் திணைக்களம்). பரமேஸ்வரி (ஒய்வு பெற்ற ஆசிரியை, கரம்பன்), மார்க்கண்டு (Rtd Price Control Inspector), இராஜபூபதி, புவனேஸ்வரி, செல்வராணி ஆகியோரது அன்பு மாமியாரும், மோகன், டோறிஸ், சேகர், ராஜன் (Switzerland), நந்தகுமார் (India), முரளி (Netherlands), முகுந்தன் (Canada), பிரபாகர், மயூரன், மதுசூதனன் (Students, Hartly College), இராஜேஸ்வரன் (Lecturer, Dept. of Geography, University of Jaffna). கௌரி, ராதாகிருஷ்ணன் (Consultant, Andresan Company), விஜயா, அசோகன், சுபத்திரா, மாயகிருஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், ஒருசான், றஜோ, ஸ்ரீபன், கார்த்திக், வைரவி, சுஜன், பிரசன்னு, ஹரிசன்னு ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்;

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (13-01-89) அவரது 'மகேச பவனம்' மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10. 00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்

இத் தகவலை உற்ருர். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

(9158) தகவல்; ம. ஆனந்தராஜா

### திரு. தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்

[தம்பிப்பிள்ளை & சன் உரிமையாளர்]

தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம் 11-01-1989 அன்று காலமானுர்.

இவர் வெள்ளாந்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ் 2 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்டவருமாவார்.

இவர் ரேணுகாவதியின் கணவரும், அம்பிகைபாகன (யா. ப. நோ. கூ. ச.), சற்குணபாகன் (விஸ்வலிங்கம் & சன்), விஜயராணி, குணபாகன் (K. S. A ), உதயகுமாரி, கெங்காதேவி, விசாகலக்ஷ்மி, கனகசபை, லோகநாதன் (குவைத்), சிறீஸ்கந்தராஜா (எவவிசன), விஜயபாரதி ஆகியோரின் தந்தையாரும், கலைவாணி, பரிமளம், சிறீஸ்கந்தராஜா (சிங்கர் திருத்தும் ஸ்தாபனம், சங்கானை), சுசிலாதேவி (வனபரிபாலன திணைக்களம்) ஆகியோரின் மாமனுரும்,லேக்காந்,கிரிஷாந்தி,கீதா, கார்த்திகா, சிவதர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, கமலாதேவி, மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரரும், சுந்தரம்பிள்ளை (கணேசானந்தா ஸ்ரோர்ஸ்),சபாரெட்ணம் [முன்னுள் மாநகரசபை செயலாளர்] சிவஞானசெல்வம் [ஞானேஸ்வரி மரக்காலை], ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 12-01-1989 பிற்பகல் 5.00 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்: உறவினர்கள்:
[8951]

### திருமதி ஆசீர்வாதம் ரத்தினம்

திருமதி ஆசீர்வாதம் ரத்தினம் காலமாகிவிட்டார். இவர் ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், அல்பேட் ரட்ணசிங்கத்தின் அருமைச் சகோதரியும், பேபி ரட்ணசிங்கத்தின் மைத்துனியும், ஸ்ரீதர். சேகர் (கனடா) ஜெயந்தி (கனடா). பிரபாகரன், சுகந்தி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், பெருமகன் சுரேந்திரன்(கனடா),சாம்ஸனின் (கனடா) பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்ருேம்.

தகவல்:
M. அல்பேட்
ரட்ணசிங்கம்.
8/1, நக்கா ரோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்; (8953)


## வாடகைக்கு வீடு தேவை

கம்பனியொன்றின் முகாமையாளருக்கு சகல வசதிகளுடன் நல்ல சூழலில் வீடு தேவை. வீடு முற்றத்துடன் இருக்க வேண்டும். பின்வரும் இடங்களில் வீடு விரும்பத்தக்கது கச்சேரி, சுண்டுக்குளி, பாண்டியன் தாழ்வு (யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட)

NO. 26 C/o உதயன்
யாழ்ப்பாணம்.
(8687)

## பெண் ஊழியர்கள் தேவை

எமது கம்பனியில் உற்பத்திப் பகுதிக்கு [Production Section] பெண் ஊழியர்கள் தேவை. நேர்முகப்பரீட்சை 16 ஆம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

பொது முகாமையாளர்,
அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டற்,
கண்டி வீதி, நாவற்குழி
(8686)

## எமது புதிய வெளியீடுகள்

(1) அர்ஜுன்- ரூபினி S.S. சந்திரன்
'தாய்ப்பாசம்'
(2) மோகன்- S.V சேகர்
'சகாதேவன் மகாதேவன்'

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி'
யாழ்ப்பாணம்.
(C/1316)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 13-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 13th January 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org